# எல்லா புகழும் ஸ்ரீ குரு மற்றும் கௌராங்கருக்கே!

# ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்ரமா

## பயணம்  மற்றும்  பொதுவான தகவல்



**இஸ்கான் (அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்),**

**ஸ்ரீ தா4ம் மாயாபுர்.**

**ஸ்தாபக ஆச்சாரியர்:**

**தெய்வத்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

**ஶ்ரீ-ராதா4யா: ப்ரணய-மஹிமா கீத்3ரு'ஷோ வானயைவா-ஸ்வாத்3யோ யேனாத்4புத-மது4ரிமா கீத்3ரு'ஷோ வா மதீ3ய:**

**ஸௌக்யம்' சாஸ்யா மத்3-அனுப4வத: கீத்3ரு'ஷம்' வேதி லோபா4த்**

**தத்3-பா4வாத்4ய: ஸமஜனி ஷசீ-க3ர்ப4-ஸிந்தௌ4 ஹரீந்து3:**

**ஶ்ரீமதி ராதாராணியின் அன்பின் மகிமையை அறிந்துகொள்ளவும், அவளது அன்பினால் அவள் மட்டுமே அனுபவிக்கக்கூடியதான தம்முடைய அற்புதமான குணங்களைப் புரிந்துகொள்ளவும், தமது அன்பின் இனிமையை உணர்வதால் அவள் அடையக்கூடிய ஆனந்தத்தைப் புரிந்துகொள்ளவும் விரும்பிய முழுமுதற் கடவுளான ஶ்ரீ ஹரி, அவளது மனோபாவங்களை முழுமையாகத் தாங்கி, கடலிலிருந்து சந்திரன் தோன்றுவதுபோல, ஶ்ரீமதி ஸச்சி தேவியின் கருவிலிருந்து தோன்றினார். - ஶ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் 1.1.6**

## ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்ரமாவிற்கு அனைவரையும் வரவேற்கிறோம்

**ஹரே கிருஷ்ண! ஜெய கௌ3ர்! ஜெய நிதாய்!**

**எல்லாப் புகழும் ஸ்ரீல பிரபுபாதர் மற்றும் அவரது சீடர்களுக்கே!**

**அன்புள்ள பக்தர்களே,**

**இங்கு வந்திருக்கும் அனைத்து பக்தர்களையும் நாங்கள் வரவேற்கிறோம்! எங்கு நாம் விரும்பியதை நாம் செய்கிறோமோ அதாவது புனித தாமத்தில் நடைபயணமாக நாம் பயணித்தல், அன்பான பக்தர்களின் சங்கத்தை ஏற்றுக்கொள்ளுதல், ஹரே கிருஷ்ண மகா-மந்திரத்தை ஜபித்தல் மற்றும் பகவத் பிரசாதத்தை கொள்ளுதல் முதலான அனைத்தும் நிரம்பிய இந்த மகிழ்ச்சிகரமான கொண்டாட்டத்தில் திளைக்கப் போகும் பக்தர்களுக்குச் சேவை செய்வதில் மாயாபுர் பக்தர்களாகிய நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.**

**1990ம் வருடத்தில், பரிக்ரமாவில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. யாத்ரீகர்கள் அனைவருக்கும் அந்நாள் முடியும் தருவாயில் இஸ்கான் மாயாப்பூருக்கு திரும்பி வருவதற்கு பதிலாக இரவு அங்காங்கே முகாம்களில் தங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டது. இது பக்தியின் பாதையில் மூழ்க விரும்புவோருக்கு ஒரு பெருமாற்றத்தை ஏற்படுத்துகிறது; அதாவது**

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, நித்யானந்த பிரபு மற்றும் அவர்களது சகாக்கள், அவர்கள் தங்களுடைய உன்னத லீலைகளை நிகழ்த்திய இந்த புனித பூமி மற்றும் இந்த கலியுகத்தில் அவர்கள் மேற்கொண்ட உன்னத பணியாகிய “கேவல- ஆனந்த”வழிமுறையை பரப்புதல் ஆகிய அனைத்தையும் ஆழமாக புரிந்து கொள்வதற்கான ஒரு உன்னத வாய்ப்பை இது நல்குகிறது.

நாம் கொண்டாடுவதற்கு நிறைய இருக்கிறது என்று நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்! ஆம்! எட்டு நாட்களில் ஏறக்குறைய பத்தாயிரம் பேர்களையும் ஒருங்கினைத்து அவர்கள் அனைவரையும் ஒரே சமயத்தில் நடைபயணத்தை மேற்கொள்ளச் செய்ய இஸ்கானால் இயலும். என்ன ஆச்சரியம்! இன்று நாம் தங்கியிருக்கும் இடங்கள் அனைத்தும் (பரிக்கிரமா முகாம்கள்) நமது இயக்கத்தைச் சேர்ந்ததாகும். மேலும் உங்கள் ஆதரவுடன் வைஷ்ணவ பாரம்பரியத்தை முழுமையாக பாதுகாக்கவும் முடியும். எல்லா புகழும் தவத்திரு ஜயப்பதாகா சுவாமி மகாராஜருக்கும் அர்ப்பணிப்பு நிறைந்த நல்வழிகாட்டும் மூத்த பக்தர்கள் அடங்கிய அவரது மாயாப்பூர் இஸ்கான் குழுவிற்கும் உரித்தாகுக!

பெரும் உதார குணம் வாய்ந்த இந்த உன்னத தாமத்தை நீங்கள் ரசித்து, சிந்தனைக்கு அப்பாற்பட்டதான சைதன்ய மஹாபிரபுவின்

வரம்பற்ற காரணமற்ற கருணையைப் பெறுவீர் என்று நாங்கள் விரும்புகிறோம்.

"... எனினும் ஸ்ரீ சைதன்யரின் அவதாரம் மிகவும் அசாதாரணமானது. உன்னதத் தொண்டில் தீவிரம் நிறைந்த ஒரு நபர் அபராதங்கள் இழைப்பவராக இருப்பினும், ஸ்ரீ சைதன்யரின் அளவற்ற கருணையினால் அவர், பகவான் மீதான அன்பை விரைவிலேயே பெற்றுவிட முடியும். ஒருவர் நிதாய் மற்றும் சைதன்யரின் உன்னத நாமங்களை அழைத்தால் கிருஷ்ண பிரேமை அவரைத் தேடி வந்துவிடும்! குற்றங்களோ அபராதங்களோ அவரது முன்னேற்றத்தைத் தடுத்துவிடாது; மேலும் விரைவில் அவர் பகவானின் மீதான தூய அன்பின் பரவசத்தில் கண்ணீர் சிந்துவார். மேலும் சைதன்ய மஹாபிரபுவின் கருணையால், எல்லா குற்றங்களும் விரைவாகக் களைந்து, அவரது இதயம் தூய்மையடைந்து, கடவுளின் அன்பு முழுமையாக அங்கு மலர்ந்துவிடும்...!"

ஸ்ரீல பக்திவினோத டாகுர்

ஸ்ரீ நவத்வீப மண்டல மகாத்மியம், பக்கம் 3

இந்த புத்தகம் முழு பரிக்கிரமாவின் போது உங்களுடைய நல்வழிகாட்டியாக இருக்கும். நீங்கள் தினமும் எங்கு செல்கிறீர்கள் என்பதையும் தீவுகளின் பெயர்கள் பற்றியும் நிகழ்ச்சிநிரல் மற்றும்

**அதன் நேரம் ஆகியவைகளையும் புரிந்துகொள்ள இது உதவுவதால் தயவுசெய்து இதை உங்களுடன் வைத்திருக்கவும். மேலும் பரிக்கரமத்தின் வழித்தடங்கள் மற்றும் கூடுதல் தகவல் முதலான விவரங்களுக்கு, எங்கள் இணையதளத்தையும் நீங்கள் அணுகலாம்: www.navadwipaparikrama.com**

**இந்த அற்புதமான காலத்தின் நினைவலைகள் எப்போதும் உங்களுடன் இருக்கட்டும்!**

**உங்கள் சேவகர்கள்,**

**நவத்வீப மண்டல பரிக்கிரமா குழு**

# மங்களாசரணம்

**வந்தே3ஹம் ஶ்ரீ கு3ரோ: ஶ்ரீயுதபத3 கமலம் ஶ்ரீகு3ரூன் வைஷ்ணவாம்ஸ்ச**

**ஶ்ரீரூபம் ஸாக்ரஜாதம் ஸஹகஃண ரகுநாதா2ன் விதம் தம்ஸஜீவம்**

**ஸாத்வைத3ம் ஸாவாது4தம் பரிஜன ஸஹிதம் க்ருஷ்ண சைதன்ய தே3வம்**

**ஶ்ரீ ராதாக்ருஷ்ண பாதா3ன் ஸஹக3ண லலிதா ஶ்ரீவிஷாகான் விதாம்ஷ்ச**

**எனது ஆன்மீக குருவின் பாத கமலங்களுக்கும், அனைத்து வைஷ்ணவர்களின் தாமரைப்பாதங்களுக்கும் எனது வணக்கங்களை நான் அர்ப்பணித்துக் கொள்கிறேன். ஶ்ரீ ரூப கோஸ்வாமி, அவரது மூத்த சகோதரரான ஸநாதன கோஸ்வாமி மற்றும் ரகுநாத தாஸ, ரகுநாத பட்ட, கோபால பட்ட, ஶ்ரீ ஜீவ கோஸ்வாமிகளின் பாத கமலங்களுக்கு எனது வணக்கங்கள். அத்வைத ஆசார்யர், கதாதரர், ஶ்ரீவாஸர் மற்றும் பக்தர் குழாமுடன், ஶ்ரீ நித்யானந்தருக்கும் ஶ்ரீ கிருஷ்ண சைதன்யருக்கும் எனது வணக்கங்கள்! ஶ்ரீமதி ராதாராணிக்கும், ஶ்ரீ கிருஷ்ணருக்கும், அவர்களது சகிகளான லலிதா, விசாகாவுக்கும் எனது வணக்கங்கள்!**

**நம ஓம் விஷ்ணு –பாதா3ய க்ருஷ்ண-ப்ரேஷ்டாய பூ-தலே ஸ்ரீமதே ப4க்திவேதா3ந்த - ஸ்வாமின் இதி நாமினே நமஸ்தே ஸாரஸ்வதி தே3வே கௌர-வாணி-ப்ரசாரிணே நிர்விஷேஷ-ஷூன்யவாதி3-பாஸ்சாத்ய-தே3ஷ-தாரிணே**

**பகவான் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவரும், அவரது தாமரைப் பாதங்களில் தஞ்சமடைந்தவருமான, தெய்வத்திரு அ.ச.பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதருக்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தை செலுத்துகின்றேன்.**

**மாயாவாதமும், சூன்யவாதமும் நிறைந்த மேற்கத்திய நாடுகளில் சைதன்ய மகாபிரபுவின் போதனைகளை கருணையோடு பிரச்சாரம் செய்கிறீர்கள்; சரஸ்வதி கோஸ்வாமியின் சேவகரே! ஆன்மீக குருவே! எங்கள் மரியாதை கலந்த வணக்கங்களை உங்களுக்கு செலுத்துகிறோம்.**

## பொருளடக்கம்


ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்ரமாவிற்கு அனைவரையும்

வரவேற்கிறோம் 3

கருணைக்கான பிரார்த்தனை 11

ஏன் அபராதங்களைத் தவிர்க்க வேண்டும்? 13

ஆடை மற்றும் வைஷ்ணவ நடத்தை 16

எதை நீங்கள் கொண்டு வரவேண்டும்? 19

தாமத்தில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் 21

நவத்வீப மண்டல பரிக்கிரம அட்டவணை 23

பரிக்கிரமத்தின் தினசரி நிகழ்ச்சிநிரல் 25

பரிக்கிரம- ஆதி4வஸ்- யோக பீடம் 26

பரிக்கிரம- ஒன்றாம் நாள்- ரிது த்வீபம் ஜானு த்வீபம் 29

பரிக்கிரம- இரண்டாம் நாள்- மோதத்ரும த்வீபம் 33

பரிக்கிரம- மூன்றாம் நாள் – ருத்ர த்வீபம் மத்ய த்வீபம் 35

பரிக்கிரம – நான்காம் நாள்- சிமந்த த்வீபம் அந்தர் த்வீபம் 39

பரிக்கிரம- ஐந்தாம் நாள் – கோத்ரும த்வீபம் 44

பரிக்கிரம- ஆறாம் நாள் – கோத்ரும த்வீபம் 48

பரிக்கிரம- ஏழாம் நாள்- மத்ய த்வீபம் 51

பரிக்கிரம- எட்டாம் நாள்- கோல த்வீபம் 53

வைஷ்ணவ பாடல்கள் 55
ஸ்ரீ சிக்ஷாஷ்டகம் 55
ப4ஜ கௌ3ரங்க3  கஹ கௌ3ரங்க3 59
உதி3லோ அருண 61
ஜீ3வ் ஜா3கோ 63
து3லே து3லே கௌ3ரசந்த3 65
கு3ருதே3வ் க்ருபா பி3ந்து4 தி3யா 66
கௌ3ர பஹூ 68
போ3ரோ ஸுகேர்  க3போர் கா3ய் 70
நதி3யா கோ3த்3ருமே 72
கபே3 ஹபே3 ஹெனோ த3ஸ 74
பரம கருண 76
ராதா கிருஷ்ண போ3ல் 77
ஹரி ஹராய நாம கிருஷ்ண 78
கௌ3ரங்க போ3லிதே ஹபே3 80

## ஆன்மீக குரு மற்றும் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் கருணையைப் பெறுவதற்கான பிரார்த்தனை

மூகம் கரோதி வாசாலம் பங்கு3ம் லங்கயதே கி3ரிம்

யத்-க்ருபா தம் அஹம் வந்தே தீன-தாரணம்

பரமானந்த3 மாதவம் ஸ்ரீ சைதன்ய ஈஸ்வரம்

"ஆன்மீக குருவின் கருணையால் ஓர் ஊமையால் கூட மிகச் சிறந்த பேச்சாளன் ஆக முடியும். ஒரு முடவனால் கூட மலைகளைக் கடக்க முடியும்; ஆகையால் பந்தப்பட்ட ஆத்மாக்களை விடுவிப்பவர்களான என்னுடைய ஆன்மீக குருவிற்கும், முழுமுதற் கடவுளான ஸ்ரீ மாதவருக்கும், எல்லாவற்றையும் முழுமையாக கட்டுப்படுத்துபவரான ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவிற்கும் எனது பணிவான வணக்கத்தை செலுத்துகின்றேன்."

"பகவான் ஸ்ரீ சைதன்யரின் உருவில் இருக்கும் முழுமுதற் கடவுள் எங்கள் மீது காரணமற்ற கருணையை பொழிவாராக. அவருடைய புன்னகை கலந்த பார்வையானது உலகில் உள்ள அனைத்து

துக்கங்களையும் விரட்டக்கூடியது. அவருடைய வார்த்தைகள் புனிதமான பக்தி கொடியை உயிர்ப்பிக்கிறது. கடவுளின் அன்பை உடனடியாக தூண்டச் செய்ய அவருடைய தாமரை பாதங்களில் அடைக்கலம் பெற வேண்டும்."

சைதன்ய சரிதாமிர்தம் ஆதிலீலை 3.63

எல்லா புகழும் அனைத்து ஆனந்தத்தையும் நல்கும் ஸ்ரீ கிருஷ்ணரின் புனித நாமத்திற்கே உரித்தாகட்டும்! இது பக்தர்களிடையே இருக்கும் சம்பிரதாய சமயக் கடமைகள், தியானம் மற்றும் வழிபாட்டை துறக்கச் செய்கிறது. ஜீவராசிகள் ஒரு தடவையாவது உச்சரித்தால், புனித நாமம் அவருக்கு முக்தியை அளிக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணரின் புனித நாமம் உயர்ந்த அமிர்தமாகும். இதுவே எனது உயிர் மற்றும் சொத்தாகும்.

சைதன்ய சரிதாமிருதத்தில் 4.71ல் குறிப்பிடப்பட்டுள்ள

ப்3ருஹத்-பா4க3வதாமிர்தம் 1.9

## புனித ஸ்தலத்தில் வசிக்கும்போது நாம் ஏன் அபராதங்களைத் தவிர்க்க வேண்டும்?

புனித ஸ்தலத்தில் ஆற்றப்படும் அனைத்து பக்தி செயல்களின் பலன்கள் ஆயிரம் மடங்காகப் பெருகுகின்றது என்று ஸ்ரீல பிரபுபாதர் விவரிக்கிறார். ஆகையால், யார் ஒருவர் புனித ஸ்தலத்தில் அபராதத்தை தவிர்த்து அங்கு வசிக்கின்றாரோ அவர்கள் பக்தியில் வெகுவிரைவாக முன்னேறலாம். ஆனால் ஏதேனும் அபராதங்கள் இழைத்தால், அவற்றின் பலன்களும் ஆயிரம் மடங்காக உயரும். ஆகையால் புனித தாமத்தில் கவனமாக அபராதங்களை நாம் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

ஸ்ரீல பக்தி வினோத தாகுரர் புனித ஸ்தலத்திற்கு எதிரான பத்து குற்றங்களையும் பட்டியலிட்டு இருக்கிறார். புனித ஸ்தலத்தில் வசிப்பதன் மூலமாகவோ அங்கு சென்றுவருவதன் மூலமாகவோ, அதன் மூலம் முழு பலனையும் அடைய விரும்புபவர்கள் இதை கவனமாகத் தவிர்க்க வேண்டும்.

1. தனது சீடருக்கு புனித ஸ்தலத்தை வெளிப்படுத்துகின்ற ஆன்மீக குருவை அவமதிப்பது குற்றம்.

2. புனித தாமம் நிரந்தரமற்றது என்று நினைப்பது குற்றம்.

3. புனித தாமத்தில் வசிப்பவர்கள் அல்லது வந்து செல்லும் யாத்திரர்களுகள் ஆகியோர சாதாரண மக்கள் என்று நினைப்பது அவர்களுக்கு செய்யும் வன்முறை ஆகும். ஸ்ரீல பிரபுபாதர் இதைப்பற்றி குறிப்பிடுவதாவது: "விருந்தானத்தில் குடியிருப்பவர்கள் அனைவரும் வைஷ்ணவர்கள் ஆவர். எப்படியோ அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் புனித நாமத்தை எப்பொழுதும் ஜபிப்பதன் காரணத்தால் அவர்கள் அனைவரும் புனிதமானவர்கள் ஆவர்" (சைதன்ய சரிதாம்ருதம், ஆதிலீலை 5.232 பொருளுரை)

4. புனித ஸ்தலத்தில் வசிக்கும்போது ஜடச்செயல்களைச் செய்வது குற்றம்.

5. புனித ஸ்தலத்தை தன் சொந்த பொருளாதார முன்னேற்றத்திற்காக விக்ரஹ-வழிபாடு மற்றும் சங்கீர்த்தனத்தை வர்த்தக ரீதியாக பயன்படுத்துவது குற்றம்.

6. புனித ஸ்தலத்திற்கு ஒரு குறிப்பிட்ட பௌதிக நாடு அல்லது மாகாணத்திற்கு உரியது என்று நினைப்பது குற்றம். எடுத்துக்காட்டாக பகவானின் ஸ்தலம் வங்காள மாகாணத்தில் உள்ளதாகக் கருதுவது அல்லது அவ்விடத்தை தேவர்கள் வழிபாட்டிற்கு தொடர்புடையதாக நினைப்பது அல்லது புனித தாமத்தின் பரப்பளவை அளக்க முயற்சிப்பது ஆகிய அனைத்தும் குற்றமாகும்.

7. புனித தாமத்தில் தங்கியிருக்கும் பொழுது பாவக்காரியங்கள் செய்வது குற்றம்.

8. விருந்தாவன தாமமும், மாயாப்பூர் தாமமும் வெவ்வேறு என்று கருதுவது குற்றம்.

9. புனித தாமத்தின் உன்னத புகழை அறுதியிட்டு கூறும் சாஸ்திரத்தங்களை நிந்திப்பது குற்றம்.

10. புனித தாமத்தின் புகழை கற்பனை என்று கருதுவதும் அதன் மீது நம்பிக்கையற்று இருப்பதும் குற்றம்.

## ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்கிரமாவிற்கான ஆடைநெறி மற்றும் வைஷ்ணவ நடத்தை

அன்புள்ள பிரபுக்கள் மற்றும் மாதாஜிக்கள் ஆகியோருக்கு!

ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்கிரமாவானது ஒரு பழமையான சமய செயல்பாடாகும். இதை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக பல புகழ் பெற்ற சாதுக்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். பகவான் சைதன்யர், பகவான் நித்யானந்தர் மற்றும் அவருடைய சகாக்கள் வலம் வந்த இந்த புனித இடத்தில் நாமும் வலம் வருவோம்! கிராமத்து மக்கள் நம்மை சாதுக்கள் என்ற கோணத்தில் காண்பார்கள். ஆனால் நம்முடைய ஆடை வித்தியாசமாகவோ அல்லது சாதாரண மக்கள் போலோவோ இருந்தால் அவர்கள் அதைக் கண்டு குழப்பம் அடைவார்கள். இதனால் இஸ்கானின் நற்பெயர், ஸ்ரீல பிரபுபாதரின் பரம்பரை ஆகியவற்றிற்கும் பாதிப்பு ஏற்படும். மேலும் நாம் நம்முடைய இலட்சியங்களை அடைய முடியாமலும் போகலாம். நம்முடைய இலக்கு என்ன? நம்மை தூய்மைபடுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் புனித நாமத்தை எல்லா இடத்திலும் பரப்பவும் பகவான் சைதன்ய மஹாபிரபுவின் புகழை பிரச்சாரம் செய்வதும் நமது இலக்காகும். கிராமத்து மக்கள் நம்மிடம் அரிதாகப் பேசுவார்கள். அதனால் நாம் அணியும் ஆடை மற்றும் நடத்தைக்

கொண்டு அவர்கள் நம்மை புரிந்துக் கொள்வார்கள். அதனால் நாங்கள் உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம், தயவு செய்து ஆடை நெறி மற்றும் வைஷ்ணவ நடத்தையையும் ஶ்ரீ நவத்வீப மண்டல பரிக்கிராமாவில் தக்க முறையில் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆடைநெறி :

1. **பிரபுக்களுக்கு** :

**● வேஷ்டி மற்றும் குர்தா**

**● தவிர்க்கவும்: விசித்திரமான பெயர்கள் மற்றும் வாக்கியங்கள் கொண்ட டி-சட்டை, லுங்கி (பின்பக்கம் மடிப்பு இல்லாத வேஷ்டி)**

**2. மாதாஜிகளுக்கு :**

**● புடவை அல்லது கோபி ஆடை ஆகியவைகளைப் பயன்படுத்தலாம். (பாவாடை, சோளி மற்றும் பின்புறத்தில் முழுமையாக மறைக்கப்பட்ட துப்பட்டா)**

**● தலைமுடி கட்டப்பட்டு இருக்க வேண்டும்.**

**தவிர்க்க வேண்டியவை:**

**● பாவாடை மற்றும் டி-சட்டை**

**● குர்தா மற்றும் காற்சட்டை(Pant)**

## வைஷ்ணவ நடத்தை:

• பொது இடங்களில் கணவன் மனைவியாக பேசுவதை தவிர்க்க வேண்டும். (நெருக்கமான தொடர்புகள் அதாவது கையைப் பிடித்தல் போன்றவை)

• ஒரு பிரபு  மற்றும் ஒரு மாதாஜி ஆகியோர் சேர்ந்து ஒரே ரிக்ஷாவில் செல்லக் கூடாது; மேலும் அவர்கள் சுதந்திரமாக பேசிக் கொண்டும், நடந்து கொண்டும் செல்லக் கூடாது.

• வெளிக்கடைகளில் பக்தர்கள் குடிக்கவோ அல்லது சாப்பிடவோ கூடாது.

• கிராம மக்களிடம் பக்தர்கள் மென்மையாகவும், கனிவாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் பேசுவது உங்களுக்குப் புரியவில்லையென்றால், நீங்கள் புன்னகையோடு "ஹரே கிருஷ்ண" என்று கூறுங்கள். அவர்களோடு தொடர்பு கொள்வதில் ஏதாவது பிரச்சனை இருந்தால் தயவு செய்து நீங்கள் இந்திய பக்தர்களை அணுகவும்.

## நீங்கள் எதையெல்லாம்  கொண்டு வரவேண்டும்?

1. ஒரு டார்ச்

2. துணி துவைப்பதற்கு ஒரு வாளி மற்றும் குவளை (Mug)

3. ஒரு கிண்ணம் அல்லது கப் – (பால் மற்றும் தண்ணீர் குடிப்பதற்கு)

4. ஒரு பாய் (வைக்கோல் அல்லது ரப்பர்) (ஓய்வு எடுப்பதற்கு)

5. ஒரு போர்வை அல்லது   துயிற்பை (Sleeping Bag)

6. கொசுவலை மற்றும் கொசு விரட்டி

7. சுகாதார கிட்

8. அதிகமான துணிகள் மற்றும் உடைமைகள் கொண்டு வருவதைத் தவிர்க்கவும்.

9. கயிறு (துணிகளைத் தொங்க விட)

10. வாஸலின் மற்றும் அடித்தூரிகை (Foot Brush)

## கவனத்தில் வைத்துக் கொள்ள:

1.குறைவான அளவிலேயே பொருள்களை எடுத்து வருவது நல்லது. தேவைக்கு அதிகமான உடைமைகளை மாயாபுரில் உள்ள உங்கள் அறையில் வைக்கவும். அல்லது (கத- வரவேற்பறையில்) பயணச் சாமான் வைக்கும் அறையில் வைக்கவும்.

2. தாமத்தில் இருக்கும் இடங்களை புகைப்படம் எடுக்க முற்பட்டால், அனைத்து பக்தர்களும் தரிசனம் செய்யும் வரை காத்திருப்பது நல்லது. அது பல இடைஞ்சல்களை நாம் தவிர்ப்பதற்கு வழிவகை செய்யும்.

3.தேவைக்கு மட்டும் பணத்தைக் கொண்டு வரவும். இளநீர் வாங்குவதற்கும் வழியில் செல்லும் கோயில்களில் உண்டியலில் இடுவது ஆகியன போன்ற அவசர தேவைக்கு மட்டுமே பணத்தை வைத்திருக்கவும். பாஸ்போர்ட்டை உங்களுடன் கொண்டு வர வேண்டாம்.

4.சூரிய வெப்பத்திலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தொப்பி அல்லது சன்பிளாக்கை பயன்படுத்திக் கொள்ளலாம்.

5. பாதுகாப்பைக் கருதி சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு கூடாரத்தை விட்டு வெளியே வர வேண்டாம்.

6.மருந்து சாப்பிடுபவர்கள் தேவையான மருந்துகளை கொண்டு வரவும்.

## செய்ய வேண்டியவை:

1. கங்கையில் நீராடும்போது உங்கள் பாதுகாப்பைக் கருதி கரையோரத்தில் இருக்கவும்.

2. கங்கையில் குளிக்கும்போது மாதாஜீக்கள் சரியான ஆடையை அணிய வேண்டும். (உதாரணத்திற்கு குர்தா மற்றும் பாவாடை )

3..பிரசாதத்தை விநியோகிக்கும்போது உங்கள் உடைமைகளைக் கவனமாக பாதுகாக்கவும் அல்லது உங்கள் நண்பரை பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

4. பரிக்கிரமாவில் காலணிகளை அணியாமல் நடந்தால் அதிகபட்ச பலன் அடைவீர்கள்.

## செய்யக் கூடாதவை:

1. கங்கையில் தனியாக சென்று குளிப்பது.

2. கூடாரத்தில் விளக்குகள் அணைத்த பிறகு அறைகளில் பேசுவது.

3. பரிக்கிரமாவில் பெரும்பாலும் ரிக்ஷாவில் செல்வது. பரிக்கிரமத்தின் அதிக பலன் நடந்து செல்வதில்தான் இருக்கிறது.

4. உங்கள் கூடாரத்தை அறைகளில் அமைக்க வேண்டாம். அதை கூடார மைதானத்தில்தான் அமைக்க வேண்டும். இதைப் பற்றி முகாம் பொறுப்பாளரிடம் பேசவும்.

**5. குப்பையை கூடாரத்தைச் சுற்றி போட வேண்டாம். குப்பைத் தொட்டியில் மட்டும் போடவும்.**

**6. நடக்கும்போது ஆண்கள்,பெண்கள் என்று கலந்து நடக்க வேண்டாம். பிரபுக்கள் பிரபுக்களோடு செல்லவும். மாதாஜிக்கள் மாதாஜிக்களுடன் செல்லவும்.**

**7. பிரசாதம் இருக்கும் இடத்தில் காலணிகளை வைக்க வேண்டாம்; இது அபராதமாகும்.**

**பாதுகாப்பை முன்னிட்டு சில குறிப்புகள் :**

*** விலை உயர்ந்த பொருட்களான லேப்டாப்.**

***ஐ-போன், ஐ-பாட், கேமரா ஆகியவற்றை கொண்டு வருவதைத் தவிர்க்கவும்.**

## கண்டிப்பாகத் தடைசெய்யப்படுபவை:

**1. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு கூடாரத்தை விட்டு வெளியே செல்வது.**

**2. கூடாரத்தில் எவ்விதமாகவும் நெருப்பை பயன்படுத்துவது (ஊதுபத்தி, கொசுவர்த்தி சுருள் உட்பட)**

**3.பரிக்கிரம பாதையில் மோட்டார் ரிக்ஷாக்களை பயன்படுத்துவது (இது அதிகமாக சத்தத்தை ஏற்படுத்தி கீர்த்தனத்தையும் மற்றும் நடந்து செல்லும் பக்தர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும்).**

## நவத்வீப மண்டல பரிக்கிரம அட்டவணை

- **நாள் 0**

  **பரிக்ரமா ஆதிவாஸ் - மாயாபுர் சந்திரோத3யா மந்தி3ரிலிருந்து  யோக3 பீடம் வரை**

  **பக்தி வேதாந்தா தேசிய பள்ளி மைதானத்தில் மாலை 4:00 மணிக்கு பரிக்கிரமா கூட்டம்.**

- **நாள் 1**

  **மாயாபுர் சந்திரோத3யா மந்திரிலிலிருந்து மக3ன்பூர் வரை**

- **நாள் 2**

  **மக3ன்பூரிலிருந்து பிரதாப்நகர் வரை**

- **நாள் 3**

  **பிரதாப்நகரிலிருந்து பெ3ல்புக்கூர் வரை**

- **நாள் 4**

  **பெல்புக்கூரிலிருந்து ஜகந்நாதர் திருக்கோவில்,ராஜாப்பூர் வரை**

- <u>**நாள் 5**</u>

**<u>ஜகந்நாதர் திருக்கோவிலில் இருந்து  பிரபுபாத் நகர்( நிஜாம்புர், கோ4ரமர) வரை</u>**

- <u>**நாள் 6**</u>

**<u>பிரபுபாத் நகரிலிருந்து (நிஜாம்பூர், கோர மரா) நைமிஷாரண்ய வரை (பிரம்மநகர்)</u>**

- <u>**நாள் 7**</u>

**<u>நைமிஷாரண்யத்திலிருந்து (பிரம்மநகர்) மஹிசுர வரை</u>**

- <u>**நாள் 8**</u>

**<u>மஹிசுரவிலிருந்து மாயாபூர் சந்திரோதயா கோவில் வரை</u>**

# தினசரி பரிக்கிரம நிகழ்ச்சிநிரல்

- காலை 4.30 மணிக்கு - மங்கள ஆரத்தி
- காலை 5.30 மணிக்கு - அறிவிப்புகள்
- காலை 5.45 மணிக்கு - பயண சாமான்களை வண்டியில் ஏற்றுதல்
- காலை 6.00 மணிக்கு - புறப்படுதல்
- காலை 9.30 மணிக்கு - காலை பிரசாதம் ( பயண மார்க்கத்தில்)
- மதியம் 1.00 மணிக்கு - பயண இலக்கை அடைதல்
- மதியம் 3.00 மணிக்கு - மதிய பிரசாதம்
- மாலை 5.30 மணிக்கு - மூத்த பக்தர்களால் நடத்தப்படும் கேள்வி பதில் நிகழ்ச்சி
- மாலை 6.00 மணிக்கு - சந்தியா ஆரத்தி
- மாலை 6.20 மணிக்கு - சிறப்பு பஜன்
- மாலை 6.30 மணிக்கு - பல சந்நியாசிகள் மற்றும் மூத்த பக்தர்களின் சிறப்பு மாலை வகுப்புகள்
- இரவு 8.20 மணிக்கு – பால் மற்றும் அவல் வழங்கப்படுதல்
- இரவு 9.00 மணிக்கு - கூடாரத்தில் விளக்குகள் அணைக்கப்படுதல்.

## நாள் 0

## ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்கிரம ஆதிவாஸ்

## அந்தர் த்வீபம், மாயாபுர்.

**ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியிடம் பகவான் நித்யானந்தர் உரைத்ததாவது: "நான் வணங்கும் பகவான் கங்கைக் கரைக்கு கிழக்கே அமைந்துள்ள மாயாபுரில் வசிக்கிறார். சாதாரண மக்களின் பார்வைக்கு விஷ்வாம்பரர் சந்நியாசம் எற்று நவத்வீபத்தை விட்டுச் சென்றாலும்கூட உண்மையாக எனது கௌராங்கர், மாயாபுர் அல்லது நவத்வீபத்தை விட்டுச் செல்வதில்லை. பக்தர்கள் அவருடைய நித்ய லீலைகளை உணர முடியும். ஜீவா, நீயும் கௌரங்கர் நடனமாடுவதைக் காணவும் முடியும். மாயாபுர் அருகே 'அந்தர்த்வீபம்' என்னும் அழகான இடம் உள்ளது. இங்கு பகவான் கௌராங்கரின் தரிசனத்தை பிரம்மா பெற்றார். ஓ ஜீவா, இதையெல்லாம் நீ உணர வேண்டுமென்றால், தயவு செய்து பரிக்ரமாவை மேற்கொள்வாயாக. இது உனக்கு நன்மையைத் தரும்.**

**நவத்வீப தாம மஹாத்மியம்,**

**அத்தியாயம் 5, பக்கம் 17**

**இடம் : யோக பீடம்**

(பகவான் சைதன்யர் தோன்றிய இடம் மற்றும் அவர் சந்நியாசம் எடுக்கும்வரை வாழ்ந்த இடம். மஹாபிரபு சந்நியாசம் ஏற்றபிறகு சச்சிமாதா, விஷ்ணுபிரியா தேவி மற்றும் அவருடைய பணியாளரான இஷான தாகுர் பல வருடங்கள் இங்கேயே இருந்தனர். நரோத்தமதாஸ் தாகுர், ஶ்ரீநிவாஸ ஆசாரியர், ராகவ பண்டிட் மற்றும் பல சாதுக்கள் இங்கு பரிக்கிரமா மேற்கொண்டார்கள்.)

நிகழ்ச்சி :

- பல்வேறு சந்யாசிகள் மற்றும் மூத்த பக்தர்களின் உபன்யாசம்.
- நம்பிக்கையற்று இருத்தலும் தாமங்களின் மகிமைகளை கற்பனை என்று நினைத்தலும்.
  சங்கல்பம் (பரிக்கிரம் செல்வதற்கு ஶ்ரீ சைதன்ய மஹா பிரபுவிடம் ஆசீர்வாதம் பெற பிரார்த்தனை செய்தல்).

சந்திக்கும் இடம் : இஸ்கான் பிரதான வாயில்

நேரம் : காலை 6.00 மணிக்கு

## யோக பீடத்தில் வீற்றிருக்கும் விக்கிரகங்கள்

**(ஶ்ரீல பக்தி வினோத டாகுர் மற்றும் ஶ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி ஆகியோர் பிரதிஷ்டை செய்தனர்)**

- ஶ்ரீஶ்ரீ ராதா மாதவர் மற்றும் ஶ்ரீ கௌராங்கர்.
- ஶ்ரீ கௌரசுந்தரர், ஶ்ரீ லக்ஷ்மிபிரியா மற்றும் ஶ்ரீ விஷ்ணுபிரியா.
- ஜெகன்னாத் மற்றும் பஞ்ச தத்துவங்கள்.
- ஜெகன்னாத் மிஷ்ரர், சச்சிமாதா மற்றும் குழந்தை நிமாய்.
- க்ஷேத்திரபால சிவா
- லக்ஷ்மிநரசிம்ம தேவர்.
- கௌர கதாதரர்.
- பரத்வாஜ-டீலா.

## தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்:

- ஜெயதேவ கோஸ்வாமியின் ஶ்ரீபட் (இல்லம்)
- மஹாபிரபு படித்துறை
- பர்கோனா க3ன படித்துறை
- வ்ருத்த சிவா படித்துறை
- மாதாய் படித்துறை
- நகராய் படித்துறை

## ரிது த்வீபம்

## முதல் நாள்

## பக்தி செயல்முறை : அர்ச்சனம்

"விஷரதரரின் புத்திரர்களுள் ஒருவரும் புகழ் பெற்றவரும் பக்தியில் சிறந்து விளங்கியவரான வித்யா வாசஸ்பதியின் பள்ளி இவ்விடத்தில் உள்ளது. யாருக்குத்தான் அவரைத் தெரியாது? பகவானின் தூய சேவகனாக இருந்தாலும், அவருடைய தூய பக்தியின் சக்தியால்  கங்கையில் அவர் நீராடிக் கொண்டிருந்த சமயத்தில் அவர் சைதன்ய மஹாபிரபுவைக் கவர்ந்தார்.

நவத்3வீப ப4வ தரங்காவிலிருந்து - ஸ்ரீல பக்தி வினோத தாகுர் இவ்வாறு பிரார்த்திக்கிறார்:

“நான் எப்பொழுது கங்கைக் கரையில் வித்ய வாசஸ்பதியுடைய பள்ளிக்கதவுகளின் வழியாக ஆன்மீக ராஜியத்தின் அழகைப் பார்த்து ரசித்து நிற்பேன்? சில நிமிடங்களுக்கு பின் சந்நியாசிகளின் நாயகனாகிய பகவான் திடீரென்று இந்த மாளிகையில் என் கண்முன் தோன்றுவாரா? சந்நியாசியின் உருவத்தில் பொன் சுடரொளிபோல் இருக்கும் பகவானைப் பார்த்ததும், மிக ஆவலுடன் நான் தரையில் கீழே விழுவேன். கோபியர்கள் கிருஷ்ணரை துவாரகையில் இளவரசனாக பார்த்ததும் அவர்களுக்கு யமுனை நதிக்கரையில் இனிமையான மாடு மேய்க்கும் கிருஷ்ணரின் லீலைகள் ஞாபகம்

வந்து அழுததைப் போல் நானும் அவ்வாறே உணர்கிறேன். சந்திரனைப் போல் பிரகாசிக்கும் முகம்போல் கௌரசந்திரரை நான் மாயாபூருக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அங்கு சிறுவனைப் போல் அவர் அலங்கரிக்கப்படுகிறார். அவருடைய தெய்வீக கரங்கள் மற்றும் கால்கள் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவீசுகின்றது. அவருடைய முடி நீளமாகவும் சுருளாகவும் உள்ளது. அவருடைய வேஷ்டி மூன்று மடிப்பாக மடிக்கப்பட்டுள்ளது. இங்கே 'ஈஷோத்யான' எனும் அவருடைய சொந்த தோட்டத்தில் தன்னுடைய பக்தர்களோடு லீலைகள் புரிகிறார். நிச்சயமாக இந்த சந்நியாசிதான் என்னுடைய பகவான் ஆவார். நான் அவருடைய சேவகன் ஆவேன். பகவானின் எல்லையற்ற லீலைகளுள் இவை ஒரு சில மட்டுமே. ப்ருது குண்ட கரை ஓரத்தில் இருக்கும் ஶ்ரீவாச பண்டிதரின் கோயிலுக்கு பகவானை அழைத்துச் செல்ல என் மனம் ஏங்குகிறது!"

நவத்வீப- ப4வ- தரங்கத்திலிருந்து பக்திவினோத டாகுர்

## ஜானு த்வீபம்

## (பக்தி செயல்முறை : வந்தனம்)

"மிகவும் அழகான ஜானுத்வீபம் வித்யாநகரின் வடக்கே உள்ளது. ஜானு முனிவர் தவம் புரிந்த வனத்தை இங்கிருந்தவாறே அனைவரும் காண முடியும். கங்கை நீரை ஜானு முனிவர் பருகினார். கங்காதேவி இந்த முனிவரிடமிருந்து மீண்டும் தோன்றியதால் அவள் "ஜஹ்னவி" என்று அறியப்பட்டாள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உயர்ந்த பக்தரான பீஷ்மதேவரின் ஆசிரமம் இங்கே உள்ளது. இந்த இடத்தில் பீஷ்மதேவர் பாகவத தர்மத்தை பற்றி முறையாகப் பயின்றார். ஜானுமுனி பகவானை எந்தவிதமான போலித்தன்மையும் இல்லாமல் வழிப்பட்டதால் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் பாத கமலங்களை எளிதாக அடைய முடிந்தது."

"புலம்புதல், பயம், இறப்பு, குழப்பத்திற்கான எல்லா காரணம், எல்லா ஜட ஆசைகள் மற்றும் கட்டுண்ட ஆத்மாக்களின் அனைத்து துன்பங்களும் இங்கு இருக்க முடியாது.

நவத்3வீப ப4வ தரங்கத்திலிருந்து

பக்தி வினோத டாகுர்

## மார்க்கம் : மாயாபூர் சந்திரோதய மந்திரிலிருந்து மகன்புர் வரை

- ✓ காலை பிரசாதம் : சாம்பாஹட்ட
- ✓ தங்குமிடம்: மக3ன்புர்

## தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்:

- சமுத்திரக3ட3 : ராஜா சமுத்திர சேனர் இங்கே வாழ்ந்தார்.
- சாம்பாஹட்ட : கௌர கதாதர மந்திர், த்விஜ வாணிநாதர் வசித்த இடம்.
- ராத்துபுர: இது ராதா குண்டத்தைப் போன்றதாகும்.
- வித்யாநகர் : சர்வபௌம பட்டாசாரியார் பிறந்த இடம் மற்றும் அவருடைய சகோதரரான வித்யாவாசஸ்பதியின் வசிப்பிடம்.
- ஜானுமுனி ஆஷ்ரமம் : இந்த இடத்தில்தான் ஶ்ரீ கௌரங்கரின் தரிசனத்தை அம்முனிவர் பெற்றார்.

## நாள் – 2

## மோத3த்3ருமத்3வீபம்

## (பக்தியின் செயல்முறை : தாஸ்யம்

நித்யானந்த பிரபு கூறியதாவது:"எட்டு இதழ்கள் கொண்ட தாமரையின் வடிவத்திலுள்ள நவத்வீப தாமின் ஒரு மூலையில் அமைக்கப்பட்ட இந்த இடம் நிச்சயமாக வைகுண்டபுரியாகும். “பரவ்யோமம்” என்னும் ஆன்மீக ஆகாயத்தில் உள்ள இந்த ஸ்ரீ வைகுண்டத்தில், பகவான் நாராயணர் வசிக்கிறார். விரஜ நதிக்கு அப்பால்தான் வைகுண்டம் உள்ளது. மாயையின் தாக்கம் இந்த இடத்தில் இருக்காது. இங்கு ஸ்ரீ-தேவி மற்றும் பூ-தேவி ஆகியோர் பகவான் நாராயணருக்கு சேவை செய்கிறார்கள். இந்த ஆன்மீக உலகத்தின் ஒளியே ப்ரம்ம-ஜோதியாகும். ஜட கண்ணோட்டத்தோடு இந்த இடத்தின் திவ்யமான இயற்கையை மக்கள் புரிந்து கொள்ள முடியாது. ஒரு முறை இந்த நாராயண- தாமத்தில் நாரதமுனி பகவானை தன்னுடைய திவ்யமான பார்வையால் தரிசித்தார். நாராயண உருவம் கௌரசந்திர உருவமாக மாறுவதை நாரதர் கண்டார். இந்த தரிசனத்திற்கு பிறகு, நாரத முனிவர் சில காலம் இங்கேயே இருந்தார்."

நவத்3வீப தா4ம மஹாத்மியத்திலிருந்து

பக்தி வினோத டாகுர்

“அர்க்க தேவர் (சூரிய தேவர்), என்மீது கருணை கொண்டு, தன்னுடைய சிவந்த மேனியின்மேல் காவி உடையை தரித்து, தன்னுடைய உடம்பு முழுக்க சந்தனம் பூசிக்கொண்டு கௌரஹரியின் புனித நாமத்தை அவர் பாடியவண்ணம் கண்களில் நீர்வடிய என் முன்னே தோன்றுவார்”.

நவத்3வீப பா4வ தரங்காவிலிருந்து

பக்திவினோத டாகுர்

## மார்க்கம் : மக3ன்புரிலிருந்து பிரதாப் நகர் வரை

- ✓ காலை பிரசாதம் : அர்க்க-டிலா
- ✓ தங்குமிடம்: பிரதாப்நகர்

## தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்:

- சாரங்க முராரியின் ஶ்ரீபட் (வீடு)
- வாசுதேவ தத்தருடைய இல்லத்தின் சிதிலமடைந்த பகுதி
- மாம்கா4ச்சி : விருந்தவன தாஸ தாகுரரின் பிறப்பிடம்.
- அர்க்க-டீலா : இது விருந்தாவனத்திலுள்ள சூரிய குண்டத்திலிருந்து வேறுபட்டதல்ல.
- மஹத்புர் (மதபுர்)
- வைகுண்டபூர்

## நாள்- 3

## ருத்ர த்வீபம்

## (பக்தியின் செயல்முறை : சக்யம்)

"பகவான் கௌராங்கரின் புகழைப் பாடுவதற்காக அனைத்து ருத்ரர்களும் (பகவான் சிவனின் பல்வேறு உருவங்கள்) கூடும் இடம் இந்த ருத்ர த்வீபமாகும். ருத்ரர்களில் முதன்மையான ஸ்ரீ நீல - லோஹிதா இங்கே தினமும் மிக உற்சாகத்தோடு ஆடுவார்; தேவர்கள் அவரை பாராட்டும் விதமாக ஆகாயத்திலிருந்து பூமாரி பொழிவார்கள்."

ருத்ர த்வீபத்தில் "நித3ய படித்துறை" உள்ளது. பகவான் சைதன்யர் சந்நியாசம் ஏற்பதற்காக கட்வாவிற்கு செல்லும் வழியில் கங்கை ஆற்றை இந்த இடத்தில் தான் கடந்து சென்றார். ஜனவரி 1510யின் இறுதியில், அவரது 25ஆம் பிறந்த நாளுக்கு சற்று முன்னதாக அவர் சந்நியாசம் ஏற்றார். அவருடைய சந்நியாசப் பெயர் “ ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு” ஆகும். சந்நியாசம் ஏற்க முடிவு செய்த நாளன்று நித்யானந்தபிரபு, கததார பண்டிதர், சச்சிமாதா, சந்திரசேகர் மற்றும் முகுந்தாவிற்கு மட்டுமே அத்தகவலை கூறினார். பகவான் நள்ளிரவில் எழுந்து கடைசியாக வீட்டை விட்டு செல்லுவதற்குத் தயாரானார். வாயிலை நெருங்கும்போது சச்சிமாதா ஒரு கற்சிலையைப்போல்

நின்று கொண்டிருந்தார். அவர் மிகவும் அதிர்ச்சியில் உறைந்திருந்தார்; அவர் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. அவர் செல்வதை தடுக்க சச்சிமாதாவால் எதுவும் சொல்ல இயலவில்லை. பகவான் சச்சிமாதாவை மூன்று முறை வலம் வந்து நமஸ்காரித்தார். அவருடைய பாதங்களில் இருந்து சில தூசிகளை சைதன்ய மஹாபிரபு எடுத்த பின்னர் நிரந்தரமாக வீட்டை துறந்தார். பின்னர் பகவான் கங்கையை நீந்திக் கடந்து கட்வாவிற்குச் சென்றார். நிதய என்றால் "கருணை இல்லாதவர்" என்று பொருள். பகவான் அவர்களை விட்டு செல்வதால் நவத்வீபில் வசிப்பவர்கள், “அவர் கருணை அற்றவர்” என்று குற்றம் சாட்டினார்கள்.

ஶ்ரீ நவத்வீப பரிக்கிரம புத்தகத்திலிருந்து - பக்தி புருஷோத்தம ஸ்வாமி

## மார்க்கம் : பிரதாப் நகரிலிருந்து பெல்புகுர்

- ✓ காலை பிரசாதம்: நிதொயா
- ✓ தங்குமிடம்: பெல்புகுர்

## தரிசிக்கும் புனிதஸ்தலங்கள்:

- சங்கரபுர : ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் தரிசனத்தை ஸ்ரீபாத சங்கராசாரியார் பெற்றார்.
- சச்சிமாதாவின் வீட்டின் இடிபாடுகள்
- பெல்புகுர்:நீலாம்பர சக்கரவர்த்தி மற்றும் சச்சிமாதா வழிபாடு செய்யப்பட்ட கோவில்

## மத்ய த்வீபம் (பக்தி செயல்முறை : ஸ்மரணம்)

மத்யத்வீபத்தில் ரிஷிகளின் உரையாடல்கள் பின்வருமாறு: "நதியாவில் நடைபெற்ற கிருஷ்ணருடைய இந்த லீலை மிகவும் அற்புதமானது. பிரம்மா முதலான தேவர்களுக்கும் கூட இதை அறியார். சச்சி-நந்தனருக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய பூரண சுதந்திரம் உண்டு. அவருடைய செயல்களை யாரும் கணிக்க இயலாது. கலியுகத்தில் எல்லா ஜீவராசிக்கும் கிருஷ்ண - ப்ரேமை என்னும் அணிகலனை மிகுந்த கவனத்துடன் அவர் விநியோகிப்பார். " யாரொருவர் கூறியதாவது: " ஶ்ரீ கௌரங்கா மஹாபிரபு கருணைக்கடல் ஆவார். அவர் கருணையை ஜீவராசிகளுக்கு விநியோகிக்கும் இந்த முறையானது இதற்கு முன்னர் எவருக்கும் வழங்கப்படவில்லை. எல்லா அவதாரங்களின் பக்தர்களையும் அவருடன் அழைத்துக்கொண்டு சங்கீர்த்தன யக்ஞத்தில் தீவிரமாக மூழ்கி பக்தியின் தீவிரத்தை உலகம் முழுவதும் பரப்புவார்.அவர் ஸந்நியாசம் ஏற்றுக் கொண்டு பரவலாக பயணம் செய்யும் போது எல்லையற்ற தீர்த்தங்கள் மற்றும் புனித ஸ்தலங்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார். முடிவாக அவர் பகவான் ஜகன்னாதரின் மகிழ்ச்சிக்காக ஶ்ரீ க்ஷேத்திர புரி தாமத்தில் வசிப்பார்.

பக்தி ரத்னாகராவிலிருந்து

நரஹரி சக்ரவர்த்தி

## நாள் - 4

## சீமந்த த்3வீபம்

## (பக்தியின் செயல்முறை : ஸ்ரவணம்)

"இந்த தீவு "சிமுலிய" ஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது. இது கங்கைக்கு தெற்கே அமைந்துள்ளது. ஶ்ரீ நித்யானந்த பிரபு ஶ்ரீ ஜீவரை பரிக்கிரமத்திற்கு அழைத்து செல்லும் சமயம் இந்த தீவானது கங்கையால் கவரப்பட்டுவிடும் என்றும் ஒரே ஒரு இடம் மட்டும் மூழ்காமல் இருக்கும். அங்கே ஜட உலக மக்கள் "சிமந்தினி" என்று அழைக்கப்படும் பார்வதி தேவியை வழிபடுவார்கள் என்றும் குறிப்பிட்டார். ஶ்ரீல பக்தி வினோத தாகுர் தன்னுடைய நவத்வீப பா4வ தரங்காவில் இது குறித்து குறிப்பிடுவதாவது: " மதுராவின் வடமேற்கே அமைந்துள்ள பிரகாசமான இந்த சிமந்த த்வீபம், கங்கை ஆற்றின் கரையே இதற்கு எல்லை என்பது புலப்படுத்துகிறது. இங்கே பார்வதி தேவி துயரத்துடன் இருந்த சமயத்தில் பகவான் கௌராங்கரின் தாமரைப்பாதத்தின் தூசியை தன்னுடைய உச்சி நடுகோட்டில் (சீமந்தா) வைத்துக் கொண்டதால் அவர் நிம்மதி அடைந்தார்."

-ஶ்ரீ நவத்வீப பரிக்ரம புத்தகம்,

பக்தி புருஷோத்தம ஸ்வாமி

## மார்க்கம் : பெல்புக்கூரிலிருந்து ஜெகன்னாத மந்திர் வரை

- ✓ **<u>காலை பிரசாதம்: சைதன்ய மடம்</u>**
- ✓ **<u>தங்குமிடம் : ஜெகன்னாத மந்திர்</u>**

## <u>தரிசிக்கும் புனிதஸ்தலங்கள்:</u>

- **<u>பஞ்சவக்த்ர சிவ ஸ்தானம்</u>**
- **<u>பில்வபுஷ்கர: விருந்தாவனத்தின் பில்வ வனத்தைப் போன்றது.</u>**
- **<u>மேகே4ர சர</u>**
- **<u>சீமந்தினீ தேவி கோவில்</u>**
- **<u>சந்த்- காசி சமாதி</u>**
- **<u>ஜெகன்னாத கோவில்</u>**
- **<u>ஸ்ரீதர- அங்கன் : கோலவேச ஸ்ரீதரின் வசிப்பிடம்.</u>**

## <u>அந்தர் த்வீபம்</u>

## (பக்தி செயல்முறை : ஆத்ம நிவேதனம்)

பல அற்புதமான லீலைகள் நடைபெற்ற மிக விசேஷமான தீவு இதுவே ஆகும். முழு சரணாகதியே இந்த தீவிற்கான பக்தி செயல்முறையாகும். இஸ்கான் மாயாபூர், யோக பீடம் மற்றும் ஸ்ரீ சைதன்ய சரஸ்வதி மடம் ஆகியவை இங்கு உள்ளது. இங்குதான் சைதன்ய மஹாபிரபு மற்றும் நித்யானந்த பிரபுவும் முதல் முறையாக சந்தித்துக் கொண்டனர்.

நித்யானந்தர் நவத்வீபத்திற்கு வந்தடைந்து விட்டார் என்று ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு புரிந்துகொண்டார். தன் மனதில் பேரானந்தத்தை உணர்ந்தார். பின்னர், எல்லா வைஷ்ணவர்களிடம் அவர்" "எனதன்பு சகோதரர்களே ! ஓரிரு நாட்களுக்குள் ஒரு சிறந்த வைஷ்ணவர் இங்கு வரப்போகிறார்!" என்று அறிவித்தார். பகவான் யாரைக் குறிப்பிடுகிறார் என்று யாருக்கும் புரியவில்லை.

ஒரு காலைப் பொழுது கௌராங்கர், பகவான் விஷ்ணுவை வழிபட்டபின் பக்தர்களை சந்திக்க வந்தார். பகவான் கூறியதாவது, "இன்று எனக்கு மிக அற்புதமான ஒரு கனவு வந்தது. என் வீட்டின் முன் "தலத்துவஜ" என்னும் மிகப்பெரிய ரதம் வந்து நின்றது. அந்த ரதத்தில் வலிமைமிக்க ஒரு சிறந்த நபர் அமர்ந்திருந்தார்; அவர் தன்

தோளுக்குமேல் ஒரு க3தையையும், அவருடைய இடது கரத்தில் தடியினால் கட்டப்பட்டிருந்த ஒரு கமண்டலத்தையையும் கொண்டிருந்தார். அவர் நீல உடையும், தலையில் நீல தலைப்பாகையும், இடது காதில் அற்புதமான கம்மலும் அணிந்திருந்தார். இந்த தோற்றத்தைக் கண்டவுடன் அவர் ஹலதரரான பகவான் பலராமருடைய மனநிலையில் இருந்தார் என்று நான் உணர்ந்தேன். என்னிடம் பத்து அல்லது இருபது தடவை, "இது நிமாய் பண்டிதரின் இல்லமா?" என்று கேட்டார். அவர் பெரிய அவதூதர் போல் இருந்தார். இப்படிப்பட்ட நபரை நான் இதுவரை கண்டதுமில்லை. நான் அவரிடம், " மதிப்பிற்குரிய சிறந்தவரே! நீங்கள் யார்?" என்று மிகுந்த மரியாதையுடன் கேட்டேன்; அவரும் புன்னகைத்து "நான் உன் சகோதரன். நாளை நாம் ஒருவரை ஒருவர் சந்திப்போம்" என்று கூறினார். இந்தக் கனவிலிருந்து, ஒரு சிறந்த நபர் இந நவத்வீபத்திற்கு வந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். விரைவில் ஒரு நபரை நாம் சந்திப்போம் என்று நான் உங்களிடம் முன்னதாவே கூறினேன் அல்லவா?. ஹரிதாஸரே! ஓ ஸ்ரீவாஸரே! அவர் ஏற்கனவே வந்து விட்டாரா என்று தயவுசெய்து வெளியே சென்று பாருங்கள்...."

ஸ்ரீ நவத்வீப பரிக்கிரமா புத்தகத்திலிருந்து

பக்தி புருஷோத்தம ஸ்வாமி

## தரிசிக்கும் புனிதஸ்தலங்கள்:

- <u>முராரி குப்த பிரபுவின் கோயில் : ஶ்ரீஶ்ரீ சீதாராமரை முராரி குப்த பிரபு வழிபட்ட இடம்.</u>
- <u>ஶ்ரீசைதன்ய மடம் (சந்திரசேகர ஆசார்ய பவன்)</u>
- <u>ஶ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகுரருடைய பஜன் குடில்</u>
- <u>ஶ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி தாகுரரின் சமாதி</u>
- <u>ஶ்ரீல கௌர கிஷோரதாஸ பாபாஜீயின் சமாதி</u>
- <u>கோல் ப3ங்க ட3ங்கா : சந்த்-காசியின் வீரர்கள் சைதன்ய மஹாபிரபுவின் மிருதங்கங்களை உடைத்த இடம்.</u>
- <u>அத்வைத பவன்: அத்வைத ஆச்சார்ய பிரபுவின் இல்லம்.</u>
- <u>கதாதர பவன் : ஶ்ரீ கதாதர பண்டிதரின் இல்லம்.</u>
- <u>ஶ்ரீவாச அங்கன் : ஶ்ரீவாச டாகுரின் இல்லம்.</u>

## <u>நாள்-5</u>

## கோத்3ரும-த்வீபம்

## (பக்தி செயல்முறை: கீர்த்தனம்)

கோத்ரும-த்வீபம் என்றால் கோ-பசு, த்ரும-மரம் மற்றும் த்வீபம்- தீவு என்று பொருள். இங்கு சுரபி பசு ஆலமரத்தின் கீழ் தவம் புரிந்தது, அதனால் இந்தத் தீவு இப்பெயர் பெற்றது. இத்தீவு பக்தி தொண்டின் அம்சமான கீர்த்தனத்தை (பகவானின் புனித நாமத்தை உச்சரிப்பதை ) குறிக்கும்.

கோத்ருமத்வீபத்தில் நடந்த ஹரி-நாம சங்கீர்த்தனத்தைப் பற்றி ஜகதானந்த பண்டிதர் விவரிக்கிறார்: “...அன்று நான், ஸ்ரீ கௌராங்கர், நித்யானந்தர் மற்றும் அவருடைய சகாக்கள் ஆகியோருடன் கங்கைக்கரைக்குச் சென்றேன். க3டிக3ச்சா கிராமத்தை (கோத்ரும த்வீபம் ) சென்றடைத்ததும் பக்தர்கள் ஹரி நாம சங்கீர்த்தனத்தை தொடங்கினார்கள். கோவிந்தர் மிருதங்கத்தை வாசித்துக் கொண்டிருக்க வசுதேவ கோஷ் புனித நாமத்தை பாடிக்கொண்டிருந்தார். கதாதர பண்டிதர் மற்றும் வக்ரேஷ்வர பண்டிதர் ஆகியோர் நடனமாடிக்கொண்டிருந்தனர். ஹரி நாமத்தின் ஒலி அதிர்வுகள் மட்டுமே கேட்டது, எல்லா திசைகளிலிருந்தும் உலுத்வாணி ஒலித்துக் கொண்டிருந்தது. எல்லோரும் கௌர-ப்ரேமையில் மூழ்கியிருந்தார்கள். எனக்கு இவ்வாறு பாடுவதோ அல்லது ஆடுவதோ தெரியாது, இருந்தாலும் நான் என் கைகளை

உயர்த்திக் கொண்டு ஆடிக் கொண்டிருந்தேன். உண்மையில், கௌராங்கர் என்னுள் புகுந்து ஆடிக்கொண்டிருந்தார். சுருதி அல்லது தாளம் பற்றி ஒரு கருத்தும் எனக்குத் தெரியாது. ஆனால், நான் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தேன். க3டிக3ச்சா கிராமத்தில் உள்ள மாடு மேய்ப்பவர்களின் கிராமத்திற்குள் (கோ3பபள்ளி) நாங்கள் நுழைந்ததும், கௌர சந்திரர் "ஓ “கிருஷ்ண பக்தர்களே! தயவு செய்து கேளுங்கள், இன்று நாம் இந்த ஏரியின் கரையிலே நடப்போம். பின்னர், இந்த மரங்களின் கீழே உறங்குவோம். இந்த ஆலமரத்தின் கீழ் பல பசுக்கள் கேளிக்கை செய்யும். இன்று கோபர்களுடன் லீலை புரிவோம்” என்று கூறினார். "பல கோபர்கள் அங்கு வந்து பால், தயிர் மற்றும் வெண்ணெய் ஆகியவைகளை எங்களுக்கு அளித்தார்கள்...”

-ப்ரேம-விவர்தத்திலிருந்து ஜெகதாநந்த பண்டிதர் குறிப்பிடுகிறார்.

மார்க்கம்: ராஜப்பூர் ஜெகந்நாத் மந்திரிலிருந்து

பிரபுபாதா நகர் வரை

- ✓ காலை பிரசாதம் : பஞ்சானன் தலா
- ✓ தங்குமிடம் : பிரபுபாதா நகர்

## தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்:

- ஆம்-கா4ட : இந்த இடத்தில், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு ஒரு மாம்பழ விதையை நட்டார், அது உடனடியாக கனிந்த பழங்கள் தரும் மரமாக மாறியது.
- ஸ்வர்ண விஹர்: இது சுவர்ணஸேன மன்னரின் தலை நகரமாகும். பின்னர், இவரே ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சகாவான புத்திமந்த கானாக தோன்றினார்.
- நரசிம்ஹபள்ளி : ஹிரண்யகசிபுவை வதம் செய்த பின்னர் ஸ்ரீ நரசிம்ஹதேவர் ஓய்வு எடுத்துக் கொண்ட இடம்.
- தே3வபள்ளி : இங்கு தேவர்களால் ஸ்ரீ நரசிம்ஹதேவர் வழிபடப்பட்டார்.

- **<u>மந்தாகினீ ஏரி : இந்த ஏரியில், ஶ்ரீ நரசிம்ஹதேவர் தன் நகத்தில் படிந்துள்ள ஹிரன்யகசிபுவின் இரத்தத்தை கழுவினார்.</u>**

## <u>நாள்-6</u>

## <u>கோ3த்3ரும -த்வீபம்</u>

(பக்தி செயல்முறை : கீர்த்தனம்)

“நவத்வீப தாமத்திற்கு நாம் சென்று, நிமாயை அங்கே வழிபடுவோம்” என்று சுரபி பதிலளித்த பின்னர், இந்திரன், சுரபி ஆகிய இருவரும் இங்கு வந்து பகவான் கௌரங்கரின் வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்த வழிபாடு மிக எளிதானதும் மிகவும் பயன்தரக் கூடியதுமாகும். யாரொருவர் பகவான் கௌரங்கரின் புனித நாமத்தை உரக்கப்பாடிக் கொண்டு அழுகிறாரோ, அவர் பகவானின் தரிசனத்தைப் பெறுவார். இந்திரன் மற்றும் சுரபி இங்கு பஜனை செய்த பின்னர் பகவான் சைதன்யர் மிக அழகான உருவத்தில், இனிமையான புன்னகையுடன் தோன்றினார். அவருடைய
திவ்யமான உருவம் மிகவும் கருணை வாய்ந்ததாக இருந்தது. பகவான் கௌராங்கர் புன்னகையுடன் கூறியதாவது: “நான் உங்களுடைய விருப்பத்தை நன்கு அறிவேன். விரைவில் என்னுடைய லீலைகளை நதியாவில் வெளிப்படுத்துவேன். இந்த லீலையின் சமயத்தில் நீங்கள் எனது சேவையில் ஈடுபடுவதன் மூலமாக மாயையின் வலையில் இனியும் சிக்காமல் இருப்பீர்கள்.” இதைக் கூறிவிட்டு பகவான் கௌராங்கர் மறைந்தார். சுரபி பசுவானது இங்கு ஆலமரத்தின் கீழ் நிரந்தரமாகத் தங்கி, பகவான் கௌராங்கரின் பாத கமலங்களுக்கு தொடர்ந்து சேவை செய்கிறாள். ஆலமரத்தின் கீழ் இந்த தீவில் அன்னை சுரபி தங்குவதால் கோத்3ரும-த்வீபம் என்று

அழைக்கப்படுகின்றது... பக்தர்களின் எல்லா ஆசைகளும் இங்கு நிறைவேற்றப்படும். யார் ஒருவர் பகவான் கௌரங்கரை இந்த குடிலில் இருந்தபடியே வழிபடுகிறார்களோ அவர்கள் பகவானின் தாமரைப் பாதங்களை நிச்சயமாக அடைவர்.

ஸ்ரீ நவத்வீப பரிக்கிரமா புத்தகத்திலிருந்து
தவத்திரு. பக்தி புருஷோத்தம ஸ்வாமி
ஸ்ரீ நவத்வீப தாம மஹாத்மியாவிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது.

மார்க்கம் : பிரபுபாதா நகரிலிருந்து ( நேதம்புர்)
நைமிஷாரண்யம் வரை (பிரம்மாநகர்)

- காலை பிரசாதம்: இஸ்கான் பக்தி வேதாந்த ஆரோக்ய ஆஸ்ரமம்

- தங்குமிடம்: நைமிஷாரண்யம் (பிரம்மா நகர்)

தரிசிக்கும் புனித ஸ்தலங்கள் :

- <u>ஹரிஹர-க்ஷேத்திரம்</u>
- <u>அலகாநந்தா நதி</u>
- <u>கௌ3ர்த3ஹ:</u>
- <u>ஸ்வாநந்தா சுகத குஞ்சம் : கௌர-கதாதர கோயில், ஸ்ரீல பக்தி வினோத தாகுரரின் வசிக்குமிடம் மற்றும் சமாதி.</u>
- <u>கௌரகிஷோர தாஸ பாபாஜீ மஹாராஜரின் பஜனைக்குடில்.</u>
- <u>கிருஷ்ண தாஸ பாபாஜியின் சமாதி மந்திர்: (ஸ்ரீல பக்தி வினோத தாகுரரின் பிரியமான வேலைக்காரர்)</u>
- <u>சுரபி-குஞ்சம் : இந்திரன் சுரபியோடு வந்து தான் செய்த அபராதத்திற்கு மன்னிப்புக் கேட்டு பகவான் சைதன்யரை வழிபட்டார். (த்வாபர யுகத்தில் இது நடந்தது). நாம ஹட்டா பிரச்சார நிகழ்ச்சியின் தலைமை அலுவலகம் இங்கு ஸ்ரீல பக்தி வினோத தாகுரரால் ஆரம்பிக்கப்பட்டது.</u>
- <u>இஸ்கான் பக்தி வேதாந்த ஆரோக்ய ஆசிரமத்தில் உள்ள ஜெகன்னாதர், பலதேவர், சுபத்ரா தேவி மற்றும் ஸ்ரீ கௌர நிதாய் விக்ரகங்கள்</u>
- <u>ஹம்ஸ-வாஹன சிவா</u>
- <u>நைமிஷாரண்யம்</u>
- <u>கோமதி நதி</u>

## <u>நாள்- 7</u>

## மத்ய-த்வீபம்
## (பக்தி செயல்முறை : ஸ்மரணம்)

மத்ய-த்வீபத்தில் ரிஷிகளின் உரையாடல்கள் பின்வருமாறு: "நாதியாவில் இந்த கிருஷ்ணரின் லீலை மிகவும் அற்புதமானது. பிரம்மா போன்ற தேவர்களுக்கும் கூட இது பற்றி தெரியாது. சச்சி நந்தனருக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய சுதந்திரம் உண்டு. அவர் செயல்களை கணிக்க இயலாது. கலியுகத்தில் மிகவும் அக்கறையோடு எல்லா ஜீவராசிக்கும் கிருஷ்ண - ப்ரேமை என்னும் அணிகலனை மிகுந்த கவனத்துடன் விநியோகிப்பார். " யாரோ கூறினார்: ஸ்ரீ கௌரங்கா மஹாபிரபு கருணைக்கடல் ஆவார். அவர் கருணையை ஜீவராசிகளுக்கு விநியோகிக்கும் இந்த முறையானது இதற்கு முன்னர் எவருக்கும் வழங்கப்படவில்லை. எல்லா அவதாரங்களின் பக்தர்களையும் அவருடன் அழைத்துக்கொண்டு சங்கீர்த்தன யகஞத்தில் தீவிரமாக மூழ்கியிருப்பார். மேலும், அவருடைய பக்தியின் தீவிரத்தை உலகம் முழுவதும் பரப்புவார். பகவான் கௌரஹரியே அவரது பக்தர்களின் உயிர் மூச்சாக இருக்கிறார். அவர் சந்நியாசம் ஏற்றுக் கொண்டு பரவலாக பயணம் செய்யும் போது எல்லையற்ற தீர்த்தங்கள் மற்றும் புனித ஸ்தலங்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார். முடிவாக. பகவான் ஜகன்னாதரின் மகிழ்ச்சிக்காக ஸ்ரீ க்ஷேத்திர புரி தாமில் வசிப்பார்".

பக்தி ரத்னாகராவிலிருந்து - நரஹரி சக்ரவர்த்தி

**மார்க்கம் : நைமிஷாரண்யத்தில் (பிரம்மா நகர்) இருந்து மஹிசுரா வரை**

- ✓ **காலை பிரசாதம் : மஹிசுரா**

- ✓ **பரிக்கிரமா வினாடி வினா & உணர்தல்களைப் பகிர்ந்து கொள்ளுதல் (மஹிசுரா முகாம்)**

- ✓ **தங்குமிடம் : மஹிசுரா**

## தரிசிக்கும் புனிதஸ்தலங்கள்

- **பிரம்ம புஷ்கரம்**
- **குருக்ஷேத்திரம்**
- **பஞ்சவேணி (ஐந்து புனித நதிகள் சங்கமிக்குமிடம் : கங்கை. யமுனா, சரஸ்வதி)**

## நாள்-8

## கோல த்வீபம்

## (பக்தி செயல்முறை : பாதசேவனம்)

"ஒரு நாள் பிற்பகலில், பகவான் நித்யானந்தர், ஸ்ரீ ஜீவ கோஸ்வாமி மற்றும் சிலருடன் கோலத்வீபத்தைச் சென்றடைந்தார். குலிய-பஹடவை ( குன்றினை) நோக்கி நடந்து செல்லும்போது பகவான் நித்யானந்தர் ஸ்ரீ ஜீவரிடம் கூறியதாவது:

"கங்கை ஆற்றைக் கடந்து நாம் செல்லும் இந்தப் பாதையானது பரிக்கிரமாவிற்கு செல்லும் சரியான வரிசைக்கிரமத்தில் அமைந்துள்ளது. ஒருமுறை சந்த்-காசியை தூய்மைபடுத்துவதற்காக சைதன்ய மஹாபிரபு சௌத- மண்டல சங்கீர்த்தனத்தில் (ஒரே சமயத்தில் பதினான்கு இசைக்குழுக்கள் கீர்த்தனம் செய்வதில்) ஈடுபட்டார். மாலையில் மஹாபிரபு சில பக்தர்களோடு மாயாபுரிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அன்று இரவு பிரம்ம - ராத்ராவாகும் (பிரம்மாவின் இரவு). அந்த நேரத்தில் மஹாபிரபு தன் சங்கீர்த்தன குழுவோடு நாம் செல்லும் இதே வரிசையில் சென்றார். அதன்பிறகு என்னுடைய பகவான் ஒவ்வொரு ஏகாதசியன்றும் வெளியே சென்று சங்கீர்த்தனம் செய்வார். அவருடைய விருப்பத்திற்கேற்ப சில நேரங்களில் அவர் ஐந்து- க்ரோஸ தூரம் கொண்ட பாதை வழியாகவோ அல்லது எட்டு-க்ரோஸ தூரம் கொண்ட பாதை வழியாக அந்தர்-த்வீபத்தைச் சுற்றி வலம் வருவார். தன் வீட்டிலிருந்து சங்கீர்த்தனத்தை ஆரம்பித்து பரகோன படித்துறையை நோக்கிச் செல்வார். பின்னர், அவர் ஸ்ரீதரரின் இல்லை நோக்கி தொடர்ந்து செல்வார். அங்கிருந்து அவர் அந்தர்-த்வீபத்தின் எல்லையை வந்தடைவார்".

ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்ரம புத்தகத்திலிருந்து<br>பக்தி புருஷோத்தம ஸ்வாமி

**சிறப்பு நிகழ்ச்சி : ஶ்ரீ நவத்வீப நகரத்தின் வீதிகளில் மஹா ஹரிநாம சங்கீர்த்தனம்.**

- **ப்ரௌட4-மாயா மந்திர்.**
- **ஜகன்னாத் தாஸ பாபாஜீ மஹாராஜரின் பஜன் குடில்.**
- **ஶ்ரீ தா4மேஸ்வர மஹாபிரபு : ஶ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் விக்கிரஹ வடிவிலுள்ள ஶ்ரீ சைதன்ய மஹாபிரபுவை அவருடைய மனைவியான ஶ்ரீமதி விஷ்ணுபிரியா தேவி வழிபட்டஇடம்.**

✓ **காலை பிரசாதம்: பக்தி வேதாந்த தேசிய பள்ளி மைதானம்.**

✓ **நிறைவடையும் இடம் : இஸ்கான் மாயாபுர் சந்திரோதய மந்திர்.**

**இஸ்கான் மாயாபுரில் அனைத்து பரிக்கிரம குழுக்கள் அனைத்தும் சங்கமிக்கும் சிறப்பு நிகழ்ச்சி!**

**அதாவது மஹா- மிலன்!**

## வைஷ்ணவப் பாடல்கள்

ஶ்ரீல பிரபுபாதர் குறிப்பிட்டிருப்பதாவது: " மலையை ஒத்த கல் போன்ற இதயத்தை உடைத்துவிடும் இடிமுழக்கம் போன்றது தான் வைஷ்ணவப் பாடல்கள்! இடிமுழக்கத்தின் சக்தியை மலைகள் அறியாவிட்டாலும் அது அதை தகர்த்து விடும்." மேலும் அவர் குறிப்பிடுகையில், " அனைவரும் அவற்றைப் பாட வேண்டும்" என்றார். எனக்கு வங்காள மொழி தெரியாது என்றும் அதனால் அவற்றின் பொருளை அறிய இயலாது என்றும் ஒருவர் வாதிடலாம். அதற்கு பதிலாக அவர் மேலும் குறிப்பிடுகையில் " அப்போதும் நீங்கள் அவற்றைப் பாட வேண்டும்" என்றார். பக்தி வினோதர், நரோத்தம தாஸர் ஆகியோருடைய பாடல்களுடைய கருப்பொருளை ஒருவர் அறிய நேர்ந்தால் அதுவே அவருக்கு பகவத்-பிரேமையை அளிக்க போதுமானதாகும்.

## புனித ஸ்தங்களில் கிருஷ்ண- கீர்த்தனம்

எனதருமை பக்தர்களே, தயவு செய்து இப்புத்தகத்தை கையில் எப்போதும் வைத்திருக்கவும். யோக-பீடம், ஶ்ரீல பக்தி வினோத தாகூரின் சமாதி, சுரபி-குஞ்சம், மம்கச்சி ஆகிய இடங்களிலும் சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்பும் இப்பாடல்களை நாம் இசைப்போம்.

## 1. ஶ்ரீ சிக்ஷாஷ்டகம்

-ஶ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாபிரபு

1.சேதோ த3ர்பண - மார்ஜனம் ப4வ-மஹா-தா3வாக்3னி-நிர்வாபணம்
ஸ்ரேய:- கைரவ-சந்த்ரிகா- விதரணம் வித்யா-வதூ4-ஜீவனம்
ஆனந்தாம்பு4தி- வர்த4னம் ப்ரதி-பதம்
பூர்ணாம்ருதாஸ்வாத3னம் ஸர்வாத்ம-ஸ்நபனம் பரம் விஜயதே ஶ்ரீ க்ருஷ்ண-ஸங்கீர்தனம்

2. நாம் நாம் அகாரி ப3ஹுதா நிஜ-ஸர்வ-சக்திஸ்
தத்ரார்பிதா நியமித: ஸ்மரணே ந கால:
ஏதாத்ருஸீ தவ க்ருபா ப4க3வன் மமாபி
து3ர்தை3வம் ஈத்3ருசம் இஹாஜனி நானுராக

3. த்ருணாத் அபி ஸு-னிசேன
தரோர் அபி ஸஹிஷ்ணுனா
அமானீனா மான- தே3ன
கீர்தனீய: ஸதா3 ஹரி:

4.ந த4னம் ந ஜனம் ந சுந்த3ரீம்
கவிதாம் வா ஜக3த்-ஈஸ காமயே
மம ஜன்மனி ஜன்மனீஸ்வரே
ப4வதாத்3 ப4க்திர் அஹைதுகீ த்வயி

5. அயி நந்த-தனுஜ கிங்கிரம்
பதிதம் மாம் விஷமே ப4வாம்பு3தௌ4
க்ருபயா தவ பாத3- பங்கஜ-
ஸ்தித-தூ4லீ-ஸத்ருசம் விசிந்தய

6.நயனம் கலத்-அஸ்ரு-தா4ரயா
வதனம் க3த்க3த-ருத்த4யா கி3ரா
புலகைர் நிசிதம் வபு: கதா3
தவ நாம-க்3ருஹணே ப4விஷ்யதி

7. யுகா3யிதம் நிமேஷேண
சக்ஷுஷர் ப்ராவ்ருஷாயிதம்
ஸுன்யாயிதம் ஜக3த் ஸர்வம்
கோ3விந்த3-வ்ரஹேண மே

8. ஆஸ்லிஷ்ய வா பாத3-ரதாம் பினஷ்டு மாம்
அத3ர்ஸனாம் மர்ம-ஹதாம் கரோது வா
யதா2 ததா2 வா விததா4து லம்படோ
மத்-ப்ராண-நாத2ஸ் து ஸ ஏவ நாபர:

மொழிபெயர்ப்பு:

1. ஸ்ரீ கிருஷ்ண நாம ஸங்கீர்த்தனமே மிகப்பெரும் வெற்றியை தரும்; ஏனென்றால் இது காலம்காலமாக நம் இதயத்தில் படிந்துள்ள அழுக்கைச் சுத்தப்படுத்தி, கட்டுண்ட வாழ்வில் தொடரும் பிறப்பு, இறப்பு என்ற தீயை அணைக்கிறது. நிலவு தன் ஒளியால் குளிர்ச்சியைக் கொடுப்பது போல, இந்த ஸங்கீர்த்தன இயக்கமானது மனித இனத்திற்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கிறது. இது

தெய்வீக ஞானத்திற்கு உயிரூட்டுகிறது. பேரானந்தக் கடலை பெருக வைக்கிறது. எப்பொழுதும் நாம் விரும்பும் அமுதத்தை முழுமையாக சுவைக்கச் செய்கிறது.

2. எம்பெருமானே, உமது திருநாமம் மட்டுமே அனைத்து ஜீவன்களுக்கும் நன்மை அளிக்கக் கூடியதாகும். இவ்வாறாக “கிருஷ்ணா”, “கோவிந்தா” என ஆயிரக்கணக்கான பெயர்களை உடையவராயிருக்கிறீர். இத்தகைய தெய்வீக நாமங்களில் உம்முடைய தெய்வீக சக்தியை உள்ளடக்கியிருக்கிறீர்கள், இந்த நாமங்களை ஜபிப்பதற்கு கடினமான நிபந்தனை எதுவும் இல்லை, உம்முடைய கருணையினால், உம்முடைய தெய்வீக நாமங்களினால், நாங்கள் சுலபமாக உம்மை அடைந்துவிட முடியும். ஆனால் இத்தகைய நாமங்களில் ருசியற்ற நான் மிகவும் துர்பாக்யசாலியாயிருக்கிறேன்.

3. பகவானின் புனித நாமத்தை ஜபிக்கும் ஒருவர் தாழ்வான மனநிலையில் இருக்க வேண்டும். தெருவில் உள்ள புல்லை விட பணிவாக இருக்க வேண்டும். மரத்தைவிடப் பொறுமையாக, பொய் கர்வங்களை தவிர்த்து, பிறருக்கு எல்லா மரியாதையையும் கொடுக்க தயாராயிருக்க வேண்டும். இத்தகைய மனோபாவத்தில் ஒருவர் பகவானின் புனித நாமத்தை இடைவிடாமல் ஜபிக்க முடியும்.

4. எல்லாம் வல்ல பெருமானே, பொருள் சேர்க்க எனக்கு விருப்பம் இல்லை. அழகிய பெண்களை நான் விரும்பவில்லை. என்னை பின்பற்றுவோரும் எனக்கு வேண்டாம். ஒவ்வொரு பிறவியிலும் உமது காரணமற்ற பக்தி சேவையே எனக்குத் தேவை.

5. நந்த மஹாராஜாவின் புதல்வனே(கிருஷ்ணா), நான் உனது நிரந்தர சேவகன்; எவ்வாறோ நான் பிறப்பு, இறப்பு என்ற கடலில் விழுந்து விட்டேன். தயவு செய்து இதிலிருந்து என்னை கைதூக்கி உனது தாமரைப் பாதங்களில் ஒரு தூசியாக என்னை வைத்துக் கொள்ளும்!

6. எம்பெருமானே, உமது புனித நாமத்தை ஜபிக்கும் போது. என் கண்களில் பக்திப் பரவசத்தால் எப்பொழுது ஆனந்த கண்ணீர் பெருகும்? எப்பொழுது எனது நா தழுதழுத்து, மயிர் சிலிர்த்து உமது நாமத்தை ஜபிக்கப் போகிறேன்?

7. கோவிந்தா, உம்முடைய பிரிவானது ஒரு க்ஷணம் என்றாலும் அது பல யுகங்களாக உணர்கிறேன். கண்களில் கண்ணீர் பெருகி மழை போல் பொழிகிறது. நீர் இல்லாமல் அனைத்து உலகத்தையும் வெற்றிடமாக நான் உணர்கிறேன்.

8. பகவான் கிருஷ்ணரைத் தவிர வேறு எவரையும் நான் என் இறைவனாக அறியேன்! அவர் என்னை முரட்டுத்தனமாக நடத்தினாலும், அணைத்துக் கொண்டாலும், என் முன் தோன்றாமல் என் இதயத்தை நோகச் செய்தாலும் அவரே என் பிரபுவாவார்! என்னிடம் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு, ஏனென்றால் அவர் சர்வ சுதந்திரமானவர்; மேலும் எப்பொழுதும் அவரே எனது வணக்கத்திற்குரிய பகவானாவார்!

## 2. ப4ஜ கௌ3ரங்க, கஹ கௌ3ரங்க3

- பிரபு நித்யானந்தர்

1. ப4ஜ கௌ3ரங்க கஹ கௌ3ரங்க3 லஹ கௌ3ரங்கே3ர நாம ரே
ஜே ஜன கௌ3ரங்க பஜே, சேஇ ( ஹோய்)ஆமார பிராண ரே

2. கௌ3ராங்க3 பொ3லியா து3 பா3ஹு துலியா நாசியா பேடா3வ் ரே

3. கௌ3ராங்க3 ப4ஜிலே கௌ3ராங்க3 ஜபிலே ஹோய் து3கே2ர அப3ஸான ரே.

1. கௌராங்கரை வழிபடுவாயாக! கௌராங்கரைப் பற்றி பேசுவாயாக! கௌராங்கரின் புனித நாமத்தை உச்சாடனம் செய்வாயாக ! கௌராங்கரை வழிபடுபவர் எவராயிருந்தாலும் அவரே எனது உயிரும் ஆத்மாவுமாவார்!

2. இரு தோள்களையும் மேலே உயர்த்திக் கொண்டு வேளியே சென்று “கௌராங்கா!” என்று உரக்க உச்சரிப்பீராக!

3. கௌராங்கருடைய திருநாமத்தை உச்சரிப்பதன் மூலம் அவரை வழிபடுபவர்கள் தங்களுடைய துன்பங்கள் அனைத்தையும் நீங்கப் பெறுவர்!

## 3. உதி3லோ அருண

- பக்திவினோத் டாகுர்

( பரிக்கிரம தினங்களில் தினசரி காலை 6 மணியளவில் இப்பாடலை நாம் பாடுவோம்)

1. உதி3லோ அருண பூரப3- பா4கே3,
த்விஜ மணி கோ3ரோ அமானி ஜாகே3,
ப4கத - சமூஹ லோய்யா ஸாதே2,
கே3லா நக3ர – ப்3ராஜே

2. ‘தாதை2 தாதை2 பா3ஜலோ கோ2ல்,
க4ன க4ன தாஹே ஜா2ஜேர ரோல்,
பிரேமே த4ல த4ல ஸோணார அங்க3
சரணே நூபுர பாஜே3

3. முகுந்த மாத4வ யாத3வ ஹரி
போ3லேன போ3லோ ரே த3த3ன போ4ரி,
மிச்சே நித – ப3சே கே3லோ ரே ராதி,
த்3விச ஷரரீர - ஸாஜே

4. ஏமன து3ர்லப4 மானவ- தே3ஹோ
பையா ஹி கோரோ பா4வ நா கேஹோ
ஏபே3 நா ப4ஜிலே யசோதர3- ஸூத,
சரமே போரிபெ3 லாஜே

5. உதி3த தபன ஹோய்லே அஸ்த,
தீ3ன கே3லோ போ3லி ஹோய்பே ப்யாஷ்ட,
தபே3 கேனோ ஏபே அலச ஹோய்,
நா ப4ஜ ஹ்ருதோ3ய- ராஜே

6. ஜீவன அனித்ய ஜா3னஹ ஸார்,
தாஹே நானா- வித4 விபத3- பா4ர்
நாமாஷ்ரய கோரி ஜ3தனே துமி
தா2கஹ ஆபன காஜே

7. ஜீவேர கல்யாண –ஸாத4ன-காம்
ஜ3கதே ஆஸி ஏ மதுர நாம்
அவித்3யா – திமிர- தபன -ரூபே
ஹிருத்3- க3க3னே பி3ராஜே

8. க்ருஷ்ண - நாம – ஸூதா4 கோரியா பான்
ஜூராவ்  பக்திவிநோத- ப்ராண்
நாம  பி3னா கிச்சு நாஹிகோ ஆரோ
சௌத்த – பு4வன-  மாஜே2

1. சூரியன் உதிக்கின்றது! வானம் சிவந்து செம்மையாக காட்சியளிக்கின்றது! பிராமணர்களுக்குள்ளே ரத்தினம் போன்று விளக்கும் கௌரசுந்தர பிரபு எழுந்துவிட்டார்! அவருடைய பக்தர்களையும் அழைத்துக்கொண்டு நாதிய கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் பிரயாணித்தார்!

2. “ தாதை”  “தாதை” என்று மிருதங்கச் சத்தம் ஒலிக்கின்றது! “ ஜா” “ ஜா” என்று கரதாளங்களின் ஒலியும் கேட்கின்றது!  பொன்னிற வடிவிலான கௌராங்கர் பக்தி பரவசத்தில் அசைந்து அசைந்து ஆடுகிறார். அவரது கால் சிலம்புகளும் ஒலிக்கின்றன!

3. அனைத்து பக்தர்களும் “முகுந்தா” “ மாதா” “ யாதவ” “ ஹரி” என்னும் புனித நாமங்களை குற்றமில்லாமல் இசைத்தனர். அவர்கள் அனைவரும் ” உங்கள் இரவுகளை தூக்கங்களிலும் பகலை உங்கள் உடலை அலங்கரிப்பதிலும் வீணாக கழிக்கின்றீர்கள்! “ என்பதை அப்போதும் உறங்கிக் கொண்டிருந்த நபர்களுக்கு  அறிவித்தனர்.

4. மிகவும் அரியதான மனித உடலை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்! இந்த அருட்கொடையை நீங்கள் புறக்கணிக்க வேண்டாம். இப்போதாவது  நீங்கள் உங்களுடைய உடலை யசோதையுடைய மைந்தனின் சேவையில் ஈடுபடுத்துங்கள்! அவ்வாறு ஈடுபடுத்தாவிட்டால், மரண நேரத்தில் உங்களுக்கு பெரிய துன்பம் காத்திருக்கின்றது.

5. ஒவ்வொரு நாளும் சூரியன் உதித்து அந்நாளின் இறுதியில் அஸ்தமிக்கும் போது அந்நாளை  நாம் இழந்து விடுகிறோம். ஏன் நீங்கள் செயலற்று இருந்துகொண்டு பரமாத்மாவான பகவானின் சேவையில் ஈடுபடாமல் இருக்கிறீர்கள்?

6. இந்த வாழ்க்கை நிரந்தரமற்றது; பல வகையான துன்பங்கள் நிறைந்தது. ஆகவே புனித நாமத்திடம் சரணடைந்து பகவானுடைய சேவையில் ஈடுபடுவதே உங்கள் வாழ்க்கையின் ஒரே நோக்கமாகக் கொள்ளுங்கள்!

**7. எல்லா ஜீவராசிகளுக்கும் அருளும் பொருட்டு பகவான் கிருஷ்ணரின் இனிய நாமம் இந்த பிரபஞ்சத்துள் அவதரித்து ஆகாயத்தில் உதிக்கும் சூரியன் போன்று இதயத்தில் அறியாமை என்னும் இருளை அழித்து அருட்சுடராக பிரகாசிக்கிறது.**

**8. அமிர்தத்தன்மை கொண்ட திருநாமத்தை தினமும் பருகுங்கள்! ஈரேழு பதினான்கு உலகங்களிலும் இதை விட சிறந்தது வேறு எதுவும் இல்லை. பக்தி விநோத டாகுரின் ஆன்மாவிற்கு இத்திருநாமம் பெறும் நிறைவை அளிக்கிறது!**

## 4. ஜீவ் ஜாகோ3 ஜீவ் ஜாகோ3

**- ஸ்ரீல பக்தி வினோத டாகுர்**

**1.ஜீவ் ஜாகோ3 ஜீவ் ஜாகோ3 கௌரசாந்த3 போ3லே**
**கோத நித்3ரா ஜாஓ மாயா பிஷாசீர கோலே**

**2. ப4ஜிபோ3 பொ3லியா ஏஸே சம்சார பி4தரே**
**பு4லியா ரோஹிலே துமி அவித்3யார ப4ரே**

**3.தோமரே லோய்தே ஆமி ஹோய்னு அவதார**
**ஆமி பி3னா ப3ந்து4 ஆர கே ஆசே தோமார**

**4. ஏனேசி ஔசதி4 மாயா நாசிபா3ரோ லாகி3**
**ஹரி- நாம மஹாமந்த்ர லாஓ துமி மாகி3’**

**5.ப4கதிவினோத3 ப்ரபு4- சரணே பரியா**
**சேஇ ஹரி-நாம- மந்த்ர லோய்லோ மாகி3யா**

## மொழிபெயர்ப்பு:

1."எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! உறங்குகின்ற ஆத்மாக்களே, எழுந்திருங்கள்! "மாயை" என்னும் கொடியவளின் மடியில் எவ்வளவு காலத்திற்கு நீங்கள் உறங்கப்போகிறீர்கள்?" என்று கௌரங்கர் அழைக்கிறார்.

2.பக்தித்தொன்டின் வழியை நீங்கள் மறந்துவிட்டதன் காரணமாக நீங்கள் பிறப்பு இறப்புச் சுழல் நிறைந்த இந்த இருண்ட உலகில் சிக்குண்டு விட்டீர்கள்.

3. உன்னைக் காப்பாற்றவே இந்த உலகிற்கு நான் கீழிறங்கி வந்துள்ளேன்; என்னைத் தவிர இவ்வுலகில் உனக்கு நண்பர்கள் வேறு எவருமில்லை.

4. உன் துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் மாயை எனும் நோயை தீர்க்கும் அருமருந்தை நான் கொணர்ந்து வந்திருக்கிறேன்.
இந்த மகா-மந்திரத்தை நீ ஏற்றுக்கொள்வாயாக:

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே"

5. ஸ்ரீல பக்திவிநோதர் கூறுகிறார்: " இந்த மகா- மந்திரத்தை ஏற்றுக்கொண்டு பகவானின் தாமரைத்திருவடிகளின் மீது விழ்ந்து நான் நமஸ்கரித்தேன்"

.

## 5. து4லே து4லே கௌ3ரச2ந்த்3

1. து4லே து4லே கொ3ரா சா2ந்த3
ஹரி கு3ண கா3இ
ஆஸியா வ்ருந்தா3வனே
நசே கௌ3ர ராய்

2. வ்ருந்தா3வனேர் தரூர் லதா
ப்ரேமே கொய் ஹரி கதா2
நிகுஷ்ஜெர் பாகி2 கு3லி
ஹரி நாம் ஸொனாய்

3. கௌ3ர போ3லே ஹரி ஹரி
ஸாரி போ3லே ஹரி ஹரி
முகே2 முகே2 ஸுக ஸாரி
ஹரி நாம் கா3இ

4. ஹரி நாமே மத்த ஹோயே
ஹரினா ஆஸிசே2 தே3இ
மயுர் மயுரி ப்ரேமே
நாசிய கெ2லாய்

5. ப்ராணே ஹரி த்4யானே ஹரி
ஹரி போ3லோ ப3த3ன் பொ4ரி
ஹரினாம் கெ3யே கெ3யே
ரஸே க3லே ஜாய்

6. ஆஸியா ஜமுனார் குலே
நாசே ஹரி ஹரி போ3லே
ஜமுனா உடோ2லே எஸே
சரண தொ4யாய்

மொழிபெயர்ப்பு:

**1.பூரண சந்திரனை ஒத்த கௌர சந்திரர் பகவான் ஹரியின் புகழைப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் விருந்தாவனத்தை அடைகிறார்.**

**2. விருந்தான மரங்களை அலங்கரிக்கும் கொடிகள் பரவசத்தில் மூழ்கி பகவான் ஹரியின் புகழை இயம்பின. அங்கிருக்கும் காடுகளில் இருந்த பறவை இனங்கள் பகவான் ஹரியின் திருநாமத்தைப் பாடின.**

**3. பகவான் கௌரசந்திரர் " ஹரி!ஹரி!'என்று உச்சரித்தவுடன் அதற்கு இசைவாக ஒரு பெண் கிளியும் " ஹரி!ஹரி!" என இசைத்தது. பின்னர் ஆண் மற்றும் பெண் கிளிகள் அனைத்தும் பகவான் ஹரியின் திருநாமத்தை ஒன்றுசேர்ந்து கானம் இசைத்தன!**

**4. திருநாமத்தினால் கவரப்பட்ட மானினங்களும் கானகத்திலிருந்து வெளிவந்தன. ஆண் மயில்களும் பெண் மயில்களும் பரவசத்தால் பீடிக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் ஆடின.**

**5. அவருடைய இதயத்தில் பகவான் ஹரி வீற்றிருந்தார்; அவர் எப்போதும் ஹரியின் இனியநாமத்தையே உச்சரித்துக் கொண்டிருந்தார். இவ்வகையில் கௌரசந்திரர் பரவசநிலையால் ஆட்கொள்ளப்பட்டு , ஹரிநாமத்தை கீர்த்தனம் செய்துகொண்டே தரையில் உருண்டு புரண்டார்.**

**6. "ஹரி! ஹரி!" என்று உச்சரித்தும் பரவசத்தில் ஆழ்ந்தும் அவர் யமுனைக் கரையை வந்தடைந்தார். அன்னை யமுனையும் பரசமடைந்து பகவான் கௌராங்கருடைய பொற்பாதங்களை கழுவினாள்!**

## 6. கு3ருதே3வ் க்ருபா பி3ந்து3 தி3யா

- பக்திவினோத டாகுர்

கு3ருதே3வ்!
1.கிருபா- பி3ந்து3 தி3யா கோரோ' ஏஇ தா3ஸே,
த்ருணாபேகா2 அதி ஹீன
ஸகல ஸஹனே, ப3ல தி3யா கோரோ',
நிஜ-மானே ஸ்பிருஹா-ஹீன

2. ஸகல ஸம்மான கோரிதே ஷகதி,
தே3ஹோ நாத2! ஜதா2ஜத2
தபே3 தோ' கை3போ3 ஹரி- நாம- சுகே2,
அபராத4 ஹ 'பே3 ஹத

3. கபே3 ஹேனோ கிருபா, லபி4யா ஏ ஜன,
கிருதார்த்த ஹோய்பே, நாத2!
சக்தி- புத்தி-ஹீன, ஆமி அதி தீ3ன,
கோரோ' மோரே ஆத்ம- ஸாத

4. ஜோக்3யதா- விசாரே, கிச்சு நாஹி பாய்,
தோமார கருணா-சார
கருணா னா ஹோய்லே, காந்தி3யா காந்தி3யா,
ப்ராண நா ராகி2போ3 ஆர

மொழிபெயர்ப்பு:

1. குருதேவா! உமது கருணையின் ஒரு துளியை மட்டும் எனக்கு அருளுங்கள்! நான் புல்லைவிட மிகக் கீழானவன். எனக்கு அனைத்து உதவிகளையும் அளியுங்கள். எனக்கு பலத்தை அளியுங்கள். எல்லாவித துன்பங்களையும் தொந்தரவுகளையும் தாங்குவதற்கு சக்தியளியுங்கள். என் சொந்தப் பெருமைக்காகவும் புகழுக்காகவும் உள்ள ஆசைகளிலிருந்து என்னை விடுவியுங்கள்.

2. ஓ தலைவா! பிரபு எல்லா ஜீவராசிகளையும் முறையாக கௌரவிப்பதற்குரிய சக்தியை எனக்குத் தந்தருளவேண்டும் அப்போது தான் நான் ஆனந்த பரவசத்தில் மூழ்கி புனித நாமங்களைப் பாடுவேன் எனது குற்றங்களும் நீங்கும்.

3.பிரபுவே! எப்போது இந்த அடியேன் உங்கள் கருணையைப் பெற்று உய்வது? நான் மிக வீழ்ச்சியடைந்தவன்; கீழானவன்; விவேகமற்றவன்; பலமற்றவன்; தயவுசெய்து என்னை உங்கள் அன்பான சேவகனாக ஆக்க வேண்டும்.

4, என்னை நீங்கள் ஆராய்ந்தீர் என்றால் எவ்வித நல்ல குணங்களும் என்னிடம் இல்லை. ஆகவே உமது கருணை எனக்கு அவசியம் தேவைப்படுகிறது. நீர் என்மீது கருணை கொள்ளாவிடில் நான் தொடர்ச்சியாக கதறியழுது கொண்டே இருப்பேன்; நான் தொடர்ந்து உயிர்வாழ மாட்டேன்.

## 7. கௌ3ர பஹு

- நரோத்தம தாஸ்

1. கௌ3ர பஹு  நா பா4ஜியா கொ3ய்னு
ப்ரேம – ரதன- த4ன ஹேலாய ஹாராய்னு

2. அத4னே யதன கரி த4ன தேயாகி3னு
ஆப்பன கரம- தோ3ஷே ஆபனி டு3பி3னு

3. ஸத்- சங்க சாடி’ கைனு அஸதே விலாஸ
தே- காரணே லாகி3லோ யே  கர்ம-ப3ந்த4- பா2ங்ஸ

4. விஷய – விஷம-  விஷ ஸதத கா2ய்னு
கௌ3ர – கீர்த்தன- ரஸே மக3ன நா ஹைனு

5. கேனோ வா ஆச்சயே ப்ராண கி ஸுக2 பாய்யா
நரோத்தம  தாஸ் கேனோ நா கே3லோ மரியா

மொழிபெயர்ப்பு:

**1. கௌராங்க பிரபுவை வழிபடுவதில் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ளாமலேயே இருந்துவிட்டேன் அதனால் நான் இப்போது “பகவான் கிருஷ்ணரின் மீதான தெய்விக அன்பு” என்ற விலை மதிப்பற்ற ஆபரணத்தை ஏற்க மறுத்துவிட்டேன். அதனால் நான் என்னையே இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறேன்.**

**2. பகவான் கிருஷ்ணரின் மீதான தூய அன்பு எனும் பொக்கிஷத்தை நிராகரித்ததன் காரணமாக நான் வேண்டுமென்றே போராடி ஏழையானேன். இதன் விளைவாக அனைத்து பாவச்செயல்களில் ஈடுபட்டேன்.**

**3. சாது பக்தர்களின் சங்கத்தை நான் நிராகரித்தேன். அதற்குப்பதிலாக பக்தரல்லாதவர்களுடன் இணைந்து அனுபவிக்க முயற்சித்தேன். இதன் விளைவாக கர்ம-வினையினுள் அகப்பட்டுக்கொண்டேன்.**

**4. புலனின்பம் எனும் சக்திமிக்க விஷத்தை நான் தொடர்ந்து பருகினேன். பகவான் சைதன்யருடைய சங்கீர்த்தன- இயக்கத்தம் எனும் அமிர்தத்தில் நீந்த மறுத்து விட்டேன்.**

**5. நான் ஏன் உயிர் வாழ வேண்டும்? என்னிடம் மகிழ்ச்சி இருக்கிறதா? ஏன் நரோத்தம தாஸர் முன்பே உயிர்விடவில்லை?**

## 8. போ3ரோ சுகே2ர் க2போ3ர் கா3இ

-பக்தி வினோத டாகுர்

1. போ3ரோ சுகே2ர் க2போ3ர் கா3இ
ஸௌரபி4- குஞ்ஜேதே நாமேர் ஹாட் கு2லேசே (கோ2த3 நிதாய்)

2. போ3ரோ மோஜார் கதா2 தாய்
ஷ்ரத்3தா4 - மூல்யே சுத்3த4- நாம சேஇ ஹாடேதே பி3காய்

3. ஜட-ப4க்த-ப்3ருந்த ப3சி'
அதி4காரி தே3கே நாம பே3ச்சே தரோ கசி'

4. ஜதி நாம கின்பே3, பா4இ
ஆமார் சங்கே3 சலோ, மஹாஜனேர் காசே2 ஜாய்

5. துமி கின்பே க்ருஷ்ண- நாம
த3ஸ்துரி லோஇபோ3 ஆமி, பூர்ண ஹ'பே3 காம

6. போ3ரோ தோ3யால் நித்யானந்த3
ஷ்ரத்3தா4-மாத்ர லோ'யே தே3ன் பரம- ஆனந்த3

7. ஏக்-பார் தே3க்லே சக்ஷே ஜல்
'கௌ3ர' போ3லே நிதாய் தே3ன் சகல ஸம்பல்

8. தே3ன் சுத்3த4 க்ருஷ்ண-சிக்ஷா
ஜாதி, த4ன . வித்3யா,ப3ல நா கோரே அபேக்ஷா

9. அமனி சாடே3 மாயா-ஜால்,
க்3ருஹே தாகோ, ப3னே தாகோ, நா தாகே ஜஷ்ஜால்.

10. ஆர் நாஇகோ கலிர் போ4ய்
ஆசண்டா3லே தே3ன் நாம நிதாய் தோ3யாமோய்

11. பக்திவினோத3 டா3கி கோய்
நிதாய்- சரண பி3னா ஆர் நாஹி ஆஸ்ரோய்

## மொழிபெயர்ப்பு:

1.உயர்ந்த ஆனந்த தகவல் பற்றிய செய்தியை நான் பாடிக் கொண்டிருக்கிறேன். சுரபி குஞ்சாவில் பிரபு நித்யானந்தர் தானே ஒரு சந்தையை புனிதப்பெயரில் நிறுவியிருக்கிறார்.

2.அந்த பலனின் செய்தி யாதெனில், ஒருவரின் நம்பிக்கையை மட்டுமே விலையாக பெற்றுக்கொண்டு பகவானின் தூய புனித நாமத்தை அந்த சந்தையில் விற்கிறார்.

3. அந்த சந்தையின் உரிமையாளரான பிரபு நித்யானந்தர் அனைத்து பக்தர்களும் ஈர்க்கப்படுவதைக் காண்கிறார். பேரத்திற்குப்பின் அவர்களுக்கு புனித நாமத்தை விற்கிறார்.

4. ஓ சகோதரனே, நீ புனித நாமத்தை வாங்க வேண்டுமானால் என்னுடன் வா. உயர்ந்த ஆத்மாவின் இருப்பிடமான நித்யாந்தரிடம் நாம் செல்ல வேண்டும்.

5. நீ கிருஷ்ணரின் நாமத்தை வாங்கலாம். நான் என் தரகை எடுத்துக்கொள்வேன். நம் அனைவரின் ஆசையும் பூர்த்தியாகும்.

6. பிரபு நித்யானந்தர் மிகவும் கருணை வாய்ந்தவர். ஒருவரின் நம்பிக்கையை மட்டும் பெற்றுக்கொண்டு உயர்ந்த ஆனந்தத்தை அவர் கொடுக்கிறார்.

7. கௌரரின் நாமத்தை ஜபிக்கும்பொழுது யாருடைய கண்களில் கண்ணீர்த் துளியை காண்கிறாரோ அவனுக்கு பிரபு நித்யானந்தர் அனைத்து செல்வங்களையும் அவருக்கு அளிக்கிறார்.

8. அவர் கிருஷ்ணரைப் பற்றிய தூய கல்வியை (அறிவை) அனைவருக்கும் கொடுக்கிறார். அவர் ஒருவனுடைய பிறப்பையோ, செல்வத்தையோ, அறிவையோ, பலத்தையோ கவனத்தில் கொள்வதில்லை.

9.குடும்ப வாழ்வில் இருந்தாலும் அல்லது காட்டில் ஒரு சன்னியாசியாக இருந்தாலும் இனியும் துன்பத்தை தொடரவிடாமல் செய்ய இப்பொழுதே நாம் மாயையின் பொய் பிடியிலிருந்து விடுபட வேண்டும்.
10. ஆகவே இனியும் கலியுகத்தின் பயம் நமக்கில்லை. கருணைவாய்ந்த நித்யானந்தர் புனித நாமத்தை சண்டாணர்களுக்கும் கொடுக்கிறார்.

11. பக்திவினோதர் "பிரபு நித்யானந்தரின் பாதகமலங்களை தவிர வேறு புகலிடம் கிடையாது" என்று அழைக்கிறார்.

## 9. நதீ3யா- கோ3த்3ருமே

- பக்திவினோத டாகுர்

1. நதி3யா கோ3த்ருமே நித்யானந்த மஹாஜன
பதியாச்சே நாம்- ஹட்டா ஜீவேர் காரண

2. (ஸ்ரத்3தா4வான் ஜன் ஹே, ஸர்த்3தா4வான் ஜன் ஹே)
பிரபு4ர ஆஜ்ஷாய், பா4ய், மாகி3 ஏய் பி4க்ஷா
போலோ 'க்ருஷ்ண,' ப4ஜோ க்ருஷ்ண, கோரோ க்ருஷ்ண சிக்ஷா

3. அபராத4- ஸூன்ய ஹோ'யே லோஹோ க்ருஷ்ண- நாம்
க்ருஷ்ண மாதா, க்ருஷ்ண பிதா, க்ருஷ்ண த4ன-ப்ராண்

4. கிருஷ்ணேர ஸம்ஸார கோரோ சாடி3 அனாச்சார்
ஜீவே தோ3யா, க்ருஷ்ண நாம்- ஸர்வ த4ர்ம- ஸார்.

மொழிபெயர்ப்பு:

1. நதியா நகரத்தின் கோத்ரும த்வீபத்தில் கருணையே வடிவான பிரபு நித்யானந்தர், வீழ்ந்த ஆத்மாக்களை விடுவிப்பதற்காக புனித நாமச் சந்தையை திறந்து வைத்துள்ளார்.

2.என் நம்பிக்கைக்குரிய மக்களே! பிரபு கௌராங்கரின் கட்டளைப்படி நான் இந்த மூன்று விண்ணப்பங்களை வேண்டி யாசிக்கின்றேன் சகோதரர்களே! “கிருஷ்ண” என்று ஜபியுங்கள்! கிருஷ்ணரையே வழிபடுங்கள்! கிருஷ்ணரைப் பற்றிய ஞானத்தை அனைவருக்கும் கற்றுக் கொடுங்கள்!

3.வைஷ்ணவ அபராதத்திலிருந்து எப்போதும் கவனமாக விலகியிருங்கள்; கிருஷ்ணரின் புனித நாமத்தை உடனடியாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணரே உனது உண்மையான தாய், தந்தை, மற்றும் வாழ்வின் ஒரே பொக்கிஷமும் ஆவார்.

4. பாவச் செயல்கள் அனைத்தையும் கைவிட்டு, உலகச் செயல்கள் அனைத்தையும் கிருஷ்ணரை மையமாகக் கொண்டே செய்ய வேண்டும். கிருஷ்ணரின் புனித நாமத்தை உரக்க உச்சரித்து, அதுவே அனைத்து தர்மங்களின் சாராம்சம் என்பதை அனைவருக்கும் பறைசாற்றுவதே உண்மையான ஜீவகாருண்யம் ஆகும்.

## 10. கபே3 ஹபே3 ஹேனோ த3ச மோர்

- பக்தி வினோத டாகுர்

1. கபே3 ஹ’பே3 ஹேனோ த3ஸ மோர்
த்யஜி’ ஜத அஸ பி3வித4 ப3ந்த4ன,
ச2திபொ3 சம்ஸார் கொ4ர்

2 ப்3ருந்தப3னபே4தே3 நப3த்3த்3விப- தா4மே
ப3ந்திபோ3 குதிரக2னி
சசிர் நந்த3ன-சரண- ஆஸ்ரேய்
கோரிபோ3 சம்ப3ந்த4 மணி’

3.ஜஹ்னவி – புலினே, சிந்மோய்-கனனே,
ப3ஸியா பி3ஜன- ஸ்தலே
க்ருஷ்- நாமம்ருத, நிரந்தர பிபோ3
த3கிபோ3 ‘கௌரங்க’ போ3லே

4.ஹா கௌர-நிதாய், தோர து3தி பா4ய்
பதித-ஜனேர் ப3ந்து4
அத4ம-பதித, அமி ஹே துர்ஜன,
ஹஓ மோரே க்ருப சிந்து4

5.கந்தி3தே கந்திதே, ஸொல- க்ரோச-தா4ம
ஜஹ்னவி உபோய் குலே
ப்4ரமிதே ப்4ரமிதே கபு4 பா4க்யா-பலே
தே3கி குச்சு தரு- மூலே I

6.ஹா ஹா மனோஹர, கி தே3கினு அமி,
போ3லிய முர்சித ஹோ’போ
சம்வித் பைய, காந்திபோ3 கோ3பனே
ஸ்மரி து3ன்ஹு க்ருப-லப3

## மொழிபெயர்ப்பு:

1. பலவகையான பந்தங்களை விளைவிக்கும் ஜட ஆசைகளைத் துறப்பதின் மூலம் நான், கொடூரமானதும் இருள்நிறைந்ததுமான இந்த பௌதிக இருப்பை கைவிடுவேன். எப்போது அந்த உன்னத நிலை என்னுடையதாக மாறும்?

2. விருந்தாவனத்திலிருந்து சற்றும் வேறுபடாததான இந்த புனித நவத்வீப தாமத்தில் ஒரு சிறுகுடிசையை நான் அமைத்துக் கொள்வேன். இறுதியாக அங்கே அன்னை புதல்வனுடைய தாமரைப்பாதங்களுடைய அடைக்கலத்தின் கீழ் பகவானுடனான எனது உன்னத உறவை நான் ஸ்தாபித்துக் கொள்வேன்.

3.கங்கைக் கரையில் வியாபித்திக்கும் ஆன்மீகத்தன்மை நிறைந்த கானகத்தில் தனிமையில் வசித்து பகவான் கிருஷ்ணருடைய அமிர்த்தத்தன்மை கொண்ட திருநாமத்தை இடைவிடாது பருகுவேன்; மேலும் கௌராங்கருடைய திருநாமத்தை கீழ்கண்ட வகையில் முழக்கமிடுவேன்.

4. “எனது அன்பிற்குரிய கௌர- நிதாய்! நீங்கள் இருவர் மட்டுமே அனைத்து ஜீவர்களுடைய உண்மையான நண்பன் ஆவீர்கள்! நான் மிகவும் கீழ்நிலையில் உள்ளவன், வீழ்ச்சியடைந்தவன், கொடூர மனம் படைத்தவன்! ஆதலால் தயவு கூர்ந்து என் மீது உங்கள் கருணை மழையைப் பொழியுங்கள்!”

5. இவ்வகையில் அவர்களை அழைத்தும் அழுது புலம்பும் நான் சில வேளைகளில் கங்கைக் கரையிலும், சில சமயங்களில் வேறுசில இடங்களிலும், அந்த 32 சதுர மைல் பரப்பளவு கொண்ட உன்னத தாமத்தின் அனைத்து இடங்களிலும் அலைவேன். அவ்வாறு அலையும் ஒரு சமயம், ஏதேனும் ஒரு நல்லதிர்ஷ்டம் எனக்கு வாய்க்க நேர்ந்தால், திடீரென்று ஒரு மரத்தடியை உற்று நோக்குவேன் ( அங்கு ஒரு அற்புத காட்சியைக் காண்பேன்....)

5.நான் அப்போது இவ்வாறு உணர்ச்சி பொங்க உரைப்பேன்: " ஆஹா! அற்புதம்! எப்படிப்பட்ட அரியதான் காட்சியை நான் கண்டு விட்டேன்?" அதன் பரவசத்தில் நான் மூர்ச்சையடைந்து கீழே வீழ்வேன். மீண்டும் உணர்வு திரும்பி விழித்துக் கொண்ட பின், "இப்பரவச நிலைகளெல்லாம் கௌர- நிதாயின் பெரும்கருணையின் சிறுதுளியை நான் பெற்றதால் தான்" என்பதை உணந்து ஓர் இடத்தில் ஒளிந்துகொண்டு இரகசியமாக கண்ணீர் விட்டு அழுவேன்!

## 11.பரம கருண

- லோசன தாஸ் டாகுர்

1. பரம கருணா, பஹு துஇ ஜ3ன
நிதாய் கௌ3ரசந்த்ர
ஸப அவதார - ஸார ஷிரோமணி
கேவல ஆனந்த3-கந்த3

2. ப4ஜோ ப4ஜோ பா4ய், சைதன்ய நிதாய்
சுத்3ருட4 பி3ஸ்வாஸ கோரி
விஷய சாடி3யா, ஸே ரஸே மஜியா,
முகே2 போ3லோ ஹரி ஹரி

3. தே3கோ2 ஒரே பா4ய், த்ரி-பு4வனே நாஇ,
யேமோன தொ3யாள தா3தா
பஷு பாகீ2 ஜு2ரே, பாஷாண வித3ரே
ஷுனி ஜாங்ர கு3ண-கா3தா2

4. சம்சாரே மஜியா, ரோஹிலி போரியா,
சே பதே3 நஹிலோ ஆஷ
ஆபன கரம, புஷ்ஜாயே ஸமன,
கஹோயே லோசன- தா3ஸ

## மொழிபெயர்ப்பு:

1. நிதாய் - கௌரசந்திரர் அகிய இரு பகவான்களுமே மிகவும கருணை வாய்ந்தவர்களாவர். அனைத்து அவதாரங்களின் சாரங்களே இவ்விருவர் ஆவார்கள். இக்குறிப்பிட்ட அவதாரங்களின் முக்கியத்துவம் என்னவெனில் அவர்கள் இருவரும் எளிமையான வழியில் ஆனந்தத்துடன் ஆடிப்பாடி ஜபிக்கும் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

2 . எனதருமை சகோதரனே, நான் உன்னிடம் வேண்டுவது என்னவென்றால் திடமான நம்பிக்கையுடனும் உண்மையுடனும் பிரபு சைதன்யர் மற்றும் நித்யானந்தரை வழிபடுவாயாக. யாரேனும் ஒருவர் இம்முறையின் மூலம் கிருஷ்ண உணர்வை அடைய விரும்பினார் என்றால் உடனடியாக புலனின்பச் செயல்களை துறந்து, “ஹரே க்ருஷ்ண! ஹரி ஹரி!” என்று எவ்வித எதிர்பார்ப்புமின்றி உச்சரிக்க வேண்டும்.

3. எனதருமை சகோதரனே, இப்போதே முயற்சியை மேற்கொண்டு இதை தேர்வு செய்வாயாக. மூவுலகங்களிலும் பிரபு சைதன்யர் மற்றும் பிரபு நித்யானந்தரைப் போன்றோர் எவருமில்லை. அவர்களது கருணையின் குணங்களோ ஒப்பற்றதாகும். அவர்களின் பெருமையினை கேட்கும் பறவைகள் மற்றும் விலங்குகள் கூட பரவசத்தால் அழுகின்றன; கல்லும் உருகத் தொடங்குகின்றன.

4. தான் இன்னும் புலன் திருப்தி எனும் வலையில் அகப்பட்டுக் கொண்டவனாகவே இருப்பதாக லோசன தாஸ் வருத்தப்படுகிறார். இதுவரையிலும் தான், பிரபு சைதன்யர் மற்றும் பிரபு நித்யானந்தரின் பாத கமலங்களால் கவரபட்டவனாக ஆகவில்லை என்ற காரணத்தினால் மரணத்தின் அதிபதியான யமராஜர், இவ்வியக்கத்தால் கவரப்படாதவனாக ஆகும்படி தனக்கு தண்டனை அளிப்பதாக வருத்தப்படுகிறார்.

## 12. ராதா4 கிருஷ்ண போ3ல் போ3ல்

**- பக்திவினோத டாகுர்**

1. ‘ராதா க்ருஷ்ண’ போ3ல் போ3ல் போ3லோ ரே ஸொபா3ய்
(ஏஇ) சிக்ஷா தி3யா, நதீ3யா
பிர்ச்சே நேசே: கௌ3ர- நிதாய்
(மிச்சே) மாயார் போ3சே, ஜாச்சோ பே4ஸே,
கா2ச்சோ2 ஹாபு3டு3பு3, பா4ய்

2. (ஜீவ்) க்ருஷ்ண தாஸ் - ஏ பிஷ்வாஸ்,
கோர்லே தோ’ ஆர் து3கோ2 நாஇ
(க்ருஷ்ண) போ3ல்பே3 ஜபே, புலக் ஹ’பே3
ஜோர்பே3 ஆங்கி, போ3லி தாய்

3. (ராதா) க்ருஷ்ண போலோ-ஸங்கே3 சலோ
ஏஇ- மாத்ரா பி4க்கா2 சாய்
(ஜய்) சகல்’ பிபோத்3 பக்திவினோத்3
போ3லே, ஜகோ2ன் ஓ- நாம் கா3ய்

### மொழிபெயர்ப்பு:

1. "ராதா-கிருஷ்ண" "ராதா- கிருஷ்ண’ என்று எல்லாரும் உச்சரியுங்கள்! | எல்லாரும் உச்சரியுங்கள்! ஶ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் நித்யானந்த பிரபுவும் நாதிய தேசமெங்கும் நடனமாடிக்கொண்டு கீழ்காணும் போதனையை அளித்தனர்: “உச்சரியங்கள்! "ராதா-கிருஷ்ண" என்று எல்லாரும் உச்சரியுங்கள்! | எல்லாரும் உச்சரியுங்கள்! நீங்கள் புலனின்பம் என்ற விஷச்சூழலில்

சிக்குண்டு மேலும் மேலும் வீழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்! "ராதா-கிருஷ்ண' என்று உச்சரியுங்கள்! அனைவரும் உச்சரியுங்கள்!"

2. நீங்கள் ஒரு தூய ஆத்மா; பகவான் கிருஷ்ணரின் நித்யமான சேவகன் என்பதை புரிந்துகொண்டால் இதற்குமேல் உங்களுக்கு துன்பமில்லை. பகவான் கிருஷ்ணருடைய திருநாமத்தை ஜபியுங்கள்! இறைபக்தியில் உமது உடல் பரவசத்தில் நடுங்கும், உமது கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரியும்! ! "ராதா- கிருஷ்ண' என்று உச்சரியுங்கள்! அனைவரும் உச்சரியுங்கள்!"

3.எங்களோடு இணைந்து " ராதா-கிருஷ்ண"ஏன்று எளிமையாக ஜபியுங்கள்! இதையே நாம் யாசிக்கும் ஓரே விஷயமாகும். "ராதா-கிருஷ்ண' என்று உச்சரியுங்கள்! அனைவரும் உச்சரியுங்கள்!" " அவ்வாறு ஜபித்தால் அனைத்து அபாயங்களும் விலகி விடும்" என்று பக்திவினோதர் கூறுகிறார்.

## 13. ஹரி ஹரயே நம: கிருஷ்ண

- நரோத்தம தாஸர்

1. ஹரி ஹரயே நம : க்ருஷ்ண யாத3வாய நம :
யாத3வாய மாத4வாய கேசவாய நம :

2. கோ3பால கோ3விந்த ராம ஶ்ரீ மதுசூதன
கிரிதாரீ கோபீநாத மதன மோஹன

3. ஶ்ரீ- சைதன்ய-நித்யானந்த ஶ்ரீ-அத்வைத- சீதா
ஹரி கு3ரு வைஷ்ணப3 பா4கவத கீ3தா

4. ஶ்ரீ-ரூப சனாதன ப4ட்ட- ரகுநாத2
ஶ்ரீ-ஜீவ கோ3பால- ப4ட்ட தா3ஸ- ரகு4நாத2

5. ஏஇ ச2ய் கோ3சைர் கோரி சரண வந்தன்
ஜாஹா ஹோய்தே பிக்4ன-நாஷ் அபீ4ஷ்ட-பூரண்

6. ஏஇ ச2ய் கோ3சைய் ஜார்- முஇ தார் தா3ஸ்
தா-ஸபா3ர பத3- ரேணு மோர பஷ்ச- க்3ராஸ்

7. தாதே3ர சரண- ஸேபி3- ப4க்த- ஸனே பா3ஸ்
ஜனமே ஜனமே ஹோய் ஏஇ அபி4லாஸ்

8. ஏஇ ச2ய் கோ3சாய் ஜபே3 பி3ரஜே கோய்லா பா3ஸ்
ராதா- க்ருஷ்ண-நித்ய-லீலா கோரிலா பிரகாஷ்

9. ஆனந்தே3 போ3லோ ஹரி ப4ஜ ப்3ருந்தா3ப3ன்
ஸ்ரீ- கு3ரு-வைஷ்ணப3- பதே3 மஜையா மன்

10. ஸ்ரீ- குரு- வைஷ்ணவ- பாத3- பத்ம கோரி ஆஸ்
நாம- சங்கீர்த்தன கோஹே நரோத்தம தாஸ

மொழிபெயர்ப்பு:

1. ஹரி | பகவான் ஹரி! கிருஷ்ண! யாதவர் ஆகிய உங்களுக்கு எனது வணக்கங்கள்! யதுக்களுடைய அரசர், மாதவன், கேசவன் எனும் பெயர்கொண்ட உங்களுக்கு எனது வணக்கங்கள்!

2. கோபாலா! கோவிந்தா! இராமா! ஸ்ரீ மதுசூதனா! கிரிதாரீ! கோபிநாதா! மதன மோஹன் !

3. ஸ்ரீ சைதன்யருக்கும் நித்யானந்தருக்கும் மங்களங்கள்! ஸ்ரீ அத்வைதருக்கு மங்களங்கள்! பகவான் ஹரி, ஆன்மீககுரு, வைஷ்ணவர்கள். ஸ்ரீமத் பாகவதம் மற்றும் ஸ்ரீமத் பகவத் கீதை ஆகிய அனைவருக்கும் மங்களங்கள்!

4. ஸ்ரீல ரூப கோஸ்வாமி, சநாதன கோஸ்வாமி, ரகுநாதபட்டகோஸ்வாமி, ஸ்ரீஜீவ கோஸ்வாமி, கோபால பட்ட கோஸ்வாமி, ரகுநாத தாஸ கோஸ்வாமி ஆகியோருக்கு மங்களங்கள்!

5. ஆறுகோஸ்வாமிகளுடைய  பாதாரவிந்தங்களுக்கும் என் வணக்கங்கள்! அவர்களை வணங்குவதால் பக்திக்கான தடைகள் அத்தனையும் அழிக்கப்படும். ஆன்மீக விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகும்!

6. ஆறு கோஸ்வாமிகளின் நான் சேவகனாவேன்! அவர்களுடைய பாதத்தூளிகளே எனக்கு அனைத்தும்!

7. ஆறுகோஸ்வாமிகளின் பாதாரவிந்தங்களுக்கு சேவைசெய்வது, பக்தர்களுடன் வசிப்பது-ஆகிய இந்த இரண்டுமே பிறவி தோறும் நான் விரும்பும் உன்னத விஷயமாகும்.

8. இந்த ஆறு கோஸ்வாமிகளும் விரஜபூமியில் வாழ்ந்த போது இராதாக்ருஷ்ணரின் நித்யமான உன்னத லீலைகளை வெளிப்படுத்தினர்.

9. ஆன்மீக குருவின் தாமரைப்பாதங்களையும் தூய வைஷ்ணவர்களையும் தியானித்து மனதை அங்கே பதியவைத்து பக்தி பரவசத்துடன் பகவான் ஹரியின் புனித நாமங்களை கீர்த்தனம் செய்து விருந்தாவனத்தை வழிபட வேண்டும்.

10. ஆன்மீக குரு மற்றும்  வைஷ்ணவர்களுடைய தாமரைப்பாதங்களில் ஆசை கொண்டவராய் பகவானின் புனித நாமகீர்த்தனத்தை நரோத்தம தாஸர்  பாடுகிறார்.

## 14. கௌராங்க போலிதே ஹபே புலக சரீர

-நரோத்தம தாஸர்

1. "கௌ3ராங்க3" போ3லிதே ஹபே3 புலக-ஷரீர
"ஹரி ஹரி" போ3லிதே நயனே பா3' பே3 நீர

2. ஆர கபே3 நிதாய்-சாந்தே3ர் கோருணா ஹோஇபே3
சம்ஸார-பா3சனா மோர கபே3 துச்ச2 ஹ'பே3

3.விஷய சாரியா கபே3 சுத்3த4 ஹ பே3 மன
கபே3 ஹாம ஹேரபோ3 ஶ்ரீ-ப்3ருந்தாப3ன

4. ரூப- ரகு4நாத2-பதே3 ஹோஇபே3 ஆகுதி
கபே3 ஹாம புஜ2போ3 ஸே ஜுக3ல- பீரிதி

5.ருப-ரகு4நாத2-பதே3 ரஹு மோர ஆஷ
ப்ரார்த2னா கோரோயே சதா3 நரோத்தம தா3ஸ

மொழிபெயர்ப்பு:

1. பகவான் கௌராங்கரின் இனிய நாமத்தை உச்சரித்தவுடன் உடனே உடல்நடுக்கம் ஏற்படக்கூடிய தருணம் எப்போது எங்களுக்குக் கிட்டும்? ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபிக்கும் போது எப்போது கண்களில் நீர் ததும்பும்?

2. நித்யானந்த சந்திரருடைய கருணையை எப்போது நான் பெறுவேன்? அவருடைய கருணையினால் எப்போது என்னுள் இருக்கும் புலனின்ப ஆசைகள் தீர்த்துப் போகும்?

3. பௌதிக கவலைகளும் விருப்பங்களும்  எப்போது நீங்கி மனமானது முழுமையாகத் தூய்மை அடைகிறதோ அப்போதுதான் விருந்தாவனத்தையும் இராதா-கிருஷ்ணர்- இவர்களுக்கிடையில் நிகழும் அன்புப்பரிமாற்றத்தையும்  புரிந்துகொள்ள என்னால் இயலும். அப்போதுதான் என்னுடைய ஆன்மீக வாழ்க்கை வெற்றியடையும்.

4. ஸ்ரீல ரூப- கோஸ்வாமி, ஸனாதன கோஸ்வாமி ஆகியோரைத் தலைமையாகக் கொண்ட அந்த ஆறு கோஸ்வாமிகள் இயற்றிய இலக்கியங்களைக் கற்பதற்கான ஆவல் எப்போது என்னுள் தோன்றும்? அவர்களுடைய அறிவுரைகளினால் மட்டுமே  இராதா-கிருஷ்ணர் – இவர்கள் இருவருக்குமிடையில் நிகழும் மாதுர்ய-பா4வத்தை என்னால் தக்க வழியில் புரிந்துகொள்ள இயலும்.

5. ஸ்ரீல ரூப, ஸநாதன கோஸ்வாமி அகியோரைத் தலைமையாகக் கொண்ட ஆறு கோஸ்வாமிகளுடைய தாமரைப் பாதங்களை அடைவதே எனது ஒரே விருப்பமாகும். அதற்காகவே நரோத்தம தாஸர் தொடர்ந்து பிரார்த்திக்கிறார்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

**www.navadwipaparikrama.com**

**ஸ்ரீ நவத்வீப மண்டல பரிக்ரம**

**தொடப்பு எண்கள்**

**Parikrama Chairman: HH Jayapataka Swami**

**Parikrama Co-Chairman: HH Lokanath Swami**

**Parikrama Coordinator - H.H. Bhakti Purusottama Swami**
**Mob - +91 94345-06434 - bps@pamho.net**

**Parikrama Manager - H.G. Subhekshana das**
**Mob - +91 74310-79740**

**South Indian Group leader – Manmohan das**
**Mob- +91 94759-225111**

**Assistant Group leader: Harilila das**
**Mob. +91 99337-06666**

**SIDC Parikrama Co-ordinator – Srinivas Shyam das**
**Mob - +91 83000-03944**